மலர்-4 இதழ்-88 ஏப்ரல் 16-30 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# தங்கம் செய்யும் செயல்முறையை பாதுகாக்கும் கருப்பசாமி

# நீங்கள் ஞான வாழ்க்கை வாழ்கிறீர்களா?



1. எந்த சூழ்நிலையாலும் மகிழ்ச்சியை இழக்காமை...
2. நிதானமாக சிந்தித்தல், சிந்தித்த பின் பொறுமையாக புரியவைத்தல்...
3. மனித வாழ்க்கையின் யதார்த்தத்தை புரிந்து கொண்டு, இறைவனிடம் மட்டுமே மனதை செலுத்துதல், தனது குறையை சோதித்தறிந்து அதில் குறைகளை களைந்து மேலும் தன்னை யோகியமாக மாற்றி கொள்ளுதல்...

இந்த மூன்று குணங்களை நீங்கள் சரியாக பின்பற்றினால், உங்களை அறியாமலேயே நீங்கள் ஞானியர் நிலைக்கு செல்வீர்கள், குடும்ப சூழலில் இருந்தாலும், மனதளவில் இறைவனுடன் தொடர்பு தன்னால் ஏற்படும். இவ்வாறு முழுமையடைந்த பின் சராசரி வாழ்க்கையின் முடிவு உங்களுக்கு முக்தி நிலையை தரும்.

# கூம்பு வடிவமும் ஹீலிங் வெற்றியும்

உயிரணு முதல் பிரபஞ்சம் வரையில் அனைத்தும் ஒரு ஒழுங்குமுறை கணிதத்துடன் வடிவமைந்து உள்ளதாக விஞ்ஞான கணித ஆய்வுகள் கூறுகிறது.

Golden Ratio எனப்படும் தங்க விகித கணித முறைப்படி இயற்கையின் கட்டுமானம் அமைந்துள்ளது, எகிப்திய பிரமிடுகள் இந்த கணித அளவீடுகள் அடிப்படையில் கட்ட பட்டுள்ளதாக கூறுகிறார்கள்

அதே கணித அமைப்பு நமது கோவில் மீது பிரதிஷ்டை செய்யப்பட்ட கூம்பு கலசத்திலும் இருப்பதாக குறிப்புகள் உள்ளது அதாவது 137.5 டிகிரி கோணத்தில் வெட்டப்பட்ட தகடுகளை கொண்டு கூம்பு வடிவத்தில் கலசங்கள் செய்து கோயில் கோபுரத்தில் பொருத்த பட்டு வந்துள்ளதாக கூறுகிறார்கள்.






பிரமீடு என்பது சதுரம் என்றால் கூம்பு வடிவ கலசம் என்பது வட்டத்தை குறிக்கிறது இந்த வட்டமும் சதுரமும் சேர்ந்த கலவைதான் இலுமினாட்டி சின்னத்தில் உள்ள காம்பஸ் மற்றும் செட் ஸ்கொயர் எனப்படும் கருவி .

ஆர்வம் உள்ளவர்கள் 137.5 டிகிரி கோணத்தில் கூம்பு வடிவம் செய்து தியானத்தில் பயன்படுத்தினால், மற்றவரின் நோய் நொடிகளை தீர்க்கும் ஹீலிங் என்ற முறையில் வெற்றி பெறலாம். விஷயம் தெரிந்த பலர் இந்த முறையைப் பயன்படுத்திதான் பல ஆன்மிக சாதனைகளைச் செய்து வருகின்றனர். ஒருசிலர் இந்த முறையைப் பயன்படுத்தி அற்ப பணத்தை சம்பாதிக்கவும் செய்கின்றனர்.

# எந்த கிருமியும் நம்மை அண்டாது, முன்னோரை பின்பற்றுதே தீர்வு

நாகரீகம் என்றபோர்வையில், மக்களின் நலனுக்காக நம் முன்னோர் சொன்ன பலவற்றை நாம் தவிர்த்துவிட்டோம். ஆனால் காலத்தின் கட்டாயம், இயற்கையின் தீர்ப்பினால் இன்று பல்வேறு தொற்று நோய்க் கிருமிகளால் உயிர் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதுபோன்ற கிருமிகளிடம் இருந்து நம்மை பாதுகாக்க நம் முன்னோர் சொல்லிச் சென்ற வழிமுறைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

❖ இரு கை கூப்பி வணக்கம் சொல்லியது.

❖ வெளியிடம் சென்று வீட்டிற்கு வரும்போது கைகால், முகம் கழுவிய பின்பே வீட்டிற்குள் நுழையும் பழக்கம்.



❖ மஞ்சள் பூசி குளித்தது தெளித்து விளையாடியது. ❖ உணவில் மிளகு சுக்கு மஞ்சள் சேர்ந்தது.

❖ வேப்பங்குச்சி உப்பு கொண்டு பல் துலக்கியது. ❖ மாட்டுச் சாணம் தெளித்து வாசல் பெருக்கியது

❖ வருடம் ஒரு முறை வீட்டிற்கு வெள்ளை அடித்தது. ❖ மாலை நேரம் வீட்டில் சாம்பிராணி ஏற்றி புகை போட்டது.

❖ எலுமிச்சம் பழம், காய்ந்த மிளகாய், படிகாரம், உத்திரசங்கு இவைகளை தலை வாசலில் தொங்க விட்டது. ❖ பெரிய காரியம் மற்றும் நெரிசல் மிக்க இடங்களில் இருந்து திரும்பியதும் உடைகளை கழற்றி வீட்டிற்கு வெளியே வைத்தது. பின்வாசல் வழியாக சென்று குளித்துவிட்டு வீட்டில் நுழைந்தது. ❖. வெற்றிலை பாக்கு போடுவதும், ❖ கசாயம் குடிப்பதும் ❖ வெள்ளாவியில் உடை வெளுத்தது

இவை அனைத்துமே கிருமியை தடுப்பதும் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதும் சுத்தமாக வாழ்வதும் பற்றி நம் முன்னோர் கூறிய அறிவுரைகளாகும்.

# விபூதியின் மகத்துவம்



பஞ்சபூதங்களில் நெருப்பு மட்டுமே அனைத்தையும் தன் வசமாக்கி தன்மயமாக்கி பரிசுத்தமாக்கி தனக்குள் ஐக்கிய படுத்தி கொண்டு கழிவாக இருக்கும் கார்பன் எனும் சாம்பலை மட்டுமே மிச்சம் வைக்கிறது அதாவது ஸ்தூல படைப்புகள் அனைத்தும் கார்பன் எனும் அடிப்படை பொருளை கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது என விஞ்ஞானம் கூறுகிறது மிச்சம் இருக்கும் இந்த சாம்பலை மட்டும் நெருப்பால் எதுவும் செய்ய முடியாது.

அதாவது சாம்பலுக்கு மரணமில்லா பெருவாழ்வு என்பது போல ஸ்தூல உடலில் ஐக்கியம் கொண்ட உயிர் பிராணன் அனைத்தும் ஆன்ம நெருப்பில் ஐக்கியமான பிறகு மீதம் இருக்கும் உடலானது சாம்பலை போன்ற அழியாத நிலையில் ஜீவசமாதி கொள்வது யோக தத்துவம் இதுவே கார்பன் அணுக்களான சிவலிங்கம் பிரதிபலிக்கிறது, சிவாலயங்களில் சாம்பல் விபூதி பூசுவதன் அர்த்தம் இதுவேயாகும்.

# பணத்தை நண்பனை போல பாதுகாத்தால் பலமடங்கு பெருகும்

"பணம் இன்றைக்குப் பல பிரச்னைகளைத் தீர்க்கும் சாவியாக இருந்து வருகிறது. அத்தியாவசியப் பொருள்களிலிருந்து ஆடம்பரமான பொருள்கள் வரை எதை வாங்க வேண்டுமென்றாலும், அதற்குப் பணம் தேவையாயிருக்கிறது.

வாழ்க்கையில் எல்லோருக்கும் விருப்பமிருந்தாலும் இல்லாவிட்டாலும் பணத்தை நோக்கி ஓட வேண்டியிருக்கிறது. வாஸ்துவும்பணமும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

வாஸ்துபடி பணம் எப்போதும் ஒருவரின் கையில் தவழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் வீட்டின் வடக்குச் சுவர் ஜன்னலுடன் சேர்ந்து இருக்க வேண்டும். கதவு சிறிது மூடப்பட்டிருக்க வேண்டும். ஜன்னல் எப்போதும் திறந்தே இருக்க வேண்டும். காற்றோட்டமும் சூரியவெளிச்சமும் வாஸ்து சாஸ்திரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால், ஜன்னல்கள் திறந் திருப்பது நல்லது.




வீட்டில் பணம் சேருவதற்கு வடக்கு திசையும் ஜன்னலும் எந்த அளவு முக்கியமோ அந்த அளவு தென் மேற்கு திசை முக்கியம். இங்குதான் நாம் பணத்தை வைக்க வேண்டும். வடமேற்கு மூலையில் பணத்தை வைக்கக் கூடாது.

பீரோ வடக்கு பார்த்து இருக்க வேண்டும். பீரோவைத் திறக்கும்போது நம் முதுகு வடக்கு நோக்கி இருக்க வேண்டும்.



பணத்தை எப்போதும் மரப்பெட்டியில்தான் வைத்து எடுக்க வேண்டும். எதையும் தேக்கி வைத்துக்கொள்ளும் என்பதால்தான் 'தேக்கு மரம்' என்று பெயர் வந்தது. அதன் உறுதியான நிலைத்தத் தன்மை நம்மிடம் பணத்தைத் தங்கிடச் செய்யும்.

காரைக்குடியைச் சேர்ந்தவர்களின்வீடுகள் தேக்கு மரக்கதவு ஜன்னல்களால் இழைக்கப்பட்டிருக்கும். அவர்கள் பணப்பெட்டியை மரத்தாலான பெட்டியில்தான் வைத்து எடுப்பார்கள். பணத்தின் அருமையை அவர்கள் உணர்ந்ததால்தான் அப்படிச் செய்தார்கள்.

பணம் நம் கைக்கு வருகிறதென்றால் அது நம் வீட்டுக்குள் வந்து பறந்துபோகும் சிட்டுக் குருவியைப் போன்றது. அதைச் சுதந்திரமாகப் பறக்கவிடுங்கள்.

நல்ல விஷயங்களுக்குத் தாராளமாகச் செலவு செய்யுங்கள். உங்களை எப்போதும் செல்வந்தராகவே எண்ணிச் செலவு செய்யுங்கள். அப்போதுதான் பணம் உங்களைத் தேடி மீண்டும் மீண்டும் வரும்.

அளவுக்கு மீறி பணம் வந்தாலும் 'சிக்கனமாக இருக்கிறேன் பேர்வழி' என்று பணத்தை இறுக்கிப்பிடித்து வைத்திருந்தால், அதை அவர்கள் ஒருநாளும் அனுபவிக்க மாட்டார்கள்.

அவர்களுடைய மகன், மகள், பேரன்மார்கள்தான் அந்தப் பணத்தைச்செலவு செய்து வாழ்வார். அதனால்தான் 'ஈயா பண்டம் தீயாய்க் கெடும்' என்ற முதுமொழியே வந்தது.

கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை சிவப்பு நிறத் துணியில் சுற்றி மரப்பெட்டியில் வைக்கும்போது, அந்தப் பணம் பல மடங்காகப் பெருகும்.

பணத்துடன் சேர்த்து சில்லரையை வைக்காதீர்கள். நிறை நிறையோடு சேரும் குறை குறையோடு சேரும் என்பதால் ரூபாய் நோட்டுக்களை தனியாக வையுங்கள்.

பணத்தை ஒருவரிடம் கொடுக்கும்போது பணத்தை மடித்துக் கொடுக்க வேண்டும். மடிப்பு அவர்களின் பக்கமும் திறப்பு நம்முடைய பக்கமும் இருக்கும்படி கொடுங்கள்.

பணப்பெட்டியில் எப்போதும் ஒரு நறுமணம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். (பீரோவில் பச்சை கற்பூரம் போட்டு வைக்கலாம்) பணத்துக்கு நாம் அடிமை ஆகாமலும் நமக்குப் பணத்தை அடிமையாக்காமலும் ஒரு நண்பனைப்போல் பணத்தை நினைத்தால், பணம் எப்போதும் நம்மைவிட்டுப் போகாமல் தங்கியிருக்கும்.

## நோய் தீர்க்கும் தன்வந்திரி மந்திரம்



'ஓம் நமோபகவதே வாசு தேவாய
தன்வந்தரயே அம்ருத கலச
ஹஸ்தாய
சர்வ ஆமய விநாசநாய
த்ருலோக்யநாதாய
மகா விஷ்ணவே நம'

பொருள்: எல்லோருக்கும் வரம் தருபவரும் வாசுதேவராக இருப்ப வரும், அமிர்த கலசத்தை கையில் ஏந்தியிருப்பவரும், சகல நோய்களை தீர்க்க மூவுலகத்தை காண்பவரும், மகாவிஷ்ணுவாக அவதரித்திருப்பவரும் ஆகிய தன்வந்திரி கடவுளே உன்னை வணங்குகிறேன். எனக்கு வந்திருக்கும் நோய்களை கண்ணுக்கு தெரியாமல் நீக்குவாயாக, என்பதாகும்.

# மந்திரத்திற்குரிய முழு பலனை பெற வீடுகளில் அபிஷேகம் செய்யுங்கள்

மந்திரங்கள் வெறும் வாயில் சிலநாட்கள் முணுமுணுத்தவுடன் பலன் கிடைக்கவில்லை என்று கூறி மந்திரம் பொய் என்ற முடிவுக்கு பலர் வந்துவிடுகின்றனர். இது முற்றிலும் தவறாகும்.

மருத்துவத்திற்கு படிக்கவேண்டுமென்றாலும், இன்ஜினியரிங் படிக்கவேண்டுமானாலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., என எந்த படிப்பையும் படிக்கவேண்டுமென்றாலும், அடிப்படையில் 1ம் வகுப்பு, 2ம் வகுப்பு என்று 10ம் வகுப்பு வரை படித்தபின்புதான் +11 வகுப்பில் மேற்கண்ட எந்த துறைக்கான படிப்பிற்கு தேவையான பிரிவை தேர்ந்தெடுத்து படித்தால்தான் மேற்கண்ட பட்டங்களை வாங்க முடியும், இதை விடுத்து நேரிடையாக யாராலும் டாக்டராகவோ, கலெக்டராகவோ, இன்ஜினியராகவோ ஆக முடியாது.

அதுபோலத்தான் எடுத்தவுடன் மந்திரங்களைகூறி அதித பலன்களைப் பெற முடியாது. அடிப்படையான விஷயங்களை நாம் செய்தால்தான் மந்திரங்களைப் பிரயோகிக்கும் அற்புத பலனை பெற்றவராக முடியும்.

உதாரணமாக, பலவித வர்ணங்கள் தாறுமாறாக தீட்டி இருக்கும் பலகையில் சுத்தமானதொரு சித்திரத்தினை வரைய முடியாது. இதற்கு முதலில் பழைய வர்ணங்களை அகற்ற வேண்டும். அது போல மந்திர சக்திகளால் உருவாகும் புதிய வகை சக்தி அலைகளை தாங்கி கொள்ள மனதில், உடலில் பக்குவம் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவனுக்கு நன்மைக்கு பதில் தீமையும் கிடைக்கலாம்.

இதனால்தான் மந்திரங்களை படிக்கும் முன்பு, மனதை ஒருமுகப்படுத்தும் விதமாக தியானம் யோகம் போன்றவற்றில் ஈடுபடவேண்டும், அதன்பின் வீட்டில் சிறிய விக்ரகங்களை வைத்து, அதற்கு தண்ணீர், பால், இளநீர், விபூதி, போன்றவற்றால் அல்லது வெறும் சுத்தமான தண்ணீரால் வசதி வாய்ப்பிற்கேற்ப அபிஷேகம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் மனம் ஒருமுகப்படும், இறை சிந்தனையில் மனம் நாட்டம் கொள்ளும்.

இதுபோன்ற நேரத்தில், அடிப்படை மந்திரங்களில் இருந்து ஆரம்பித்து, சக்தி வாய்ந்த மந்திரங்களை சொல்ல பழகினால் நினைத்த பலனை அடையலாம்.

வாழ்க்கையை வளம் ஆக்கும் மந்திரங்கள் என்று எடுத்து கொண்டால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மந்திரங்கள் உள்ளது.

மனம் ஒருமுகப்படுத்தியதும், சிவபுராணம், நமச்சிவாய பதிகம் போன்ற தெளிவாக பொருள் அறிந்து கூறப்படும் மந்திரங்களை மன சித்தியோடு கூறிவந்தால் அதித பலன்கள் கிடைக்கும்.








# தீராத செல்வமும், உணவு பஞ்சத்தையும் போக்கும் கோதூளி லக்னம்

இந்து மதத்தில், பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் வசிப்பதாக ஐதீகம். கோ பூஜை செய்வது, கோ தானம் கொடுப்பது மற்றும் உணவளிப்பது அளவற்ற நன்மைகளை கொடுக்கும்.

பசுக்கள் மேய்ச்சல் நிலங்களில் மேய்ந்து, வயிறார உண்டு, துள்ளிக் குதித்து விளையாடி, தூசியுடன் கொட்டிலுக்கு திரும்பும் நேரமே கோதுளி லக்னம் எனப்படும்.

பொதுவாக ஒரு மனிதன் சந்தோஷமாக இருக்கும்பொழுது அவனிடம் நமது தேவைகளை கேட்டால், நம் தேவைகள் ஓரளவு நிறைவேறும்.

அதேபோன்று இந்த நேரத்தில் பசுவை வழிபட பீடைகள் நீங்கி, செல்வம் தழைத்தோங்கும்.

பொதுவாக பிரம்ம முகூர்த்த நேரத்தில் வீட்டில் விளக்கு ஏற்றி வழிபாடு செய்பவர்களுக்கு எந்த தரித்திரமும் அண்டாது.

சூரிய உதயத்திற்கு முன் வீட்டில் பிரம்ம முகூர்த்தத்தில் விளக்கு ஏற்றி, சூரிய உதய நேரத்தில், சூரியனை வழிபடுவது எப்பேர்பட்ட தோஷத்தையும் போக்கும்.

பொதுவாக சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் வீட்டில் விளக் கேற்றி வழிபடுவது நல்லது.

ஒரு நாழிகை என்பது ஜோதிடத்தில் 24 நிமிடம்.

சராசரியாக மாலை 5.45 முதல் 6.15 வரை உள்ள நேரமே மகாலட்சுமி வரும் நேரம் ,பசு கொட்டிலுக்கு வரும் நேரம் அதாவது கோதூளி லக்ன நேரம் (முகூர்த்தம் )எனப்படும்.

இங்கு 6 மணியை நடுவில் வைத்து அதற்கு முன்பான 12 நிமிடம் 5.48 லிருந்து 6.12 வரை உச்ச கோதுளி லக்னம் எடுத்துக் கொள்ளலாம்.



5 .48 மணி நிமிடத்திலிருந்து 6 மணிக்குள் வீட்டில் விளக்கேற்றி அதாவது சூரிய அஸ்தமனத் திற்கு முன்பு வீட்டில் விளக்கேற்றி வழிபட்டால் மஹாலக்ஷ்மியின் பூரண அருள் கிடைக்கும்.

வீட்டில் பூஜைகளை செய்து முடித்தபின், மஹாலக்ஷ்மியின் பூரண அருளைப் பெற அருகில் பசு இருந்தால் அவற்றையும் வழிபடலாம். அதற்கு உணவு கொடுக்கலாம்.

வீட்டில் இருக்கும் அனைவரும் எளிதில் செய்யக்கூடிய இந்த எளிய வழிபாட்டின் மூலம் உங்களுடைய செல்வநிலை உயரும். தரித்திரம் நீங்கும். அன்னபூரணியின் அருள் ஆசியால், ருசியான பஞ்சமில்லாத உணவு கிடைக்கும்.

ஜோதிடர் மாரிமுத்து.
தொடர்பு எண் 9788968519

# மகான்கள் முனிவர்கள்

## நோய்வாய்ப்படுவதன் காரணமும் ரகசியமும்

ராஜயோகம் பயில்பவர்கள் தனிமையில்,அமைதியான வாழ்க்கையை நாடி சென்றுவிடுவார்கள்.ஆகவே அவர்களுக்கு நோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு.உடல் நலன் பாதிக்கப்பட்டால் அதை சரி செய்யவும் அவர்களால் முடியும்.

பக்தியோகத்தில் செல்லும் ஒருவருக்கு உடல் நலன் பாதிப்பட்டால் அது இறைவன் தந்த பரிசு என்று நினைத்து அதை அப்ப டியே ஏற்றுக்கொண்டு வாழ்வார்கள்.அதை நீக்கவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த் தனை செய்ய மாட்டார்கள்

ஞான யோகத்தில் செல்பவர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படால் அதைக்குறித்து கவலைப் பட மாட்டார்கள்.உடல் என்பது பொய்த்தோற்றம் என்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று நினைப்பார்கள்.

கர்மயோகத்தில் செல்லும் ஒருவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டால். தன்னுடைய முன்வினை பயன்களால்தான் இவ்வாறு நடக்கிறது அவைகளை அனுபவிப்பதன் மூலம் பாவங்கள் போகும் என்று நினைப்பார்கள். ஆகவே அதற்காக வருத்தப்பட மாட்டார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் புற்றுநோயால் அவதிப் பட்டுகொண்டிருக்கும்போது பலர் அவரிடம் வருவதை நிறுத்திக்கொண்டார்கள்.இவரது நோயையே இவரால் நீக்க முடியவில்லையே இவர் என்ன பெரிய யோகியா? என்று மக்கள் அப்போது நினைத்தார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அன்னை காளியிடம் இதுபற்றி கேட்டார். பிறரது பாவங்களை நீ ஏற் றுக்கொண்டதால் உனக்கு நோய் வந்திருக்கிறது என்று காளி கூறினாள்.



சுவாமி யோகி களால் நோயை நீக்க முடியும். நீங்கள் இந்த நோய் குணமடை யட்டும் என்று நினைத்து உங்கள் மனத்தை உடல்மீது செலுத்தினால் நோய் குண மடைந்துவிடும் சிலர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கூறினார்கள்.

பிறரது பாவத்தை ஏற்றுள்ளதால் நோய் வந்திருக்கிறது, இப்போது அந்த நோயை குணப்படுத்தினால், மீண்டும் பாவங் கள் அந்த மக்களிடமே சென்றுவிடும் என்ப தால் ஸ்ரீராமகிருஷ்ணர் அதை செய்ய மறுத்து விட்டார்.

எனது மனம் இறைவனிடம் சமர்பிக் கப்பட்டு விட்டது, இந்த உடல் இறைவனின் கருவி,அவர் விரும்பியதால் நோய் வந்திருக்கிறது, இறைவனி டம் கொடுக்கப்பட்ட இந்த கருவியை. அவரிட மிருந்து எடுத்துக்கொள்வதா? அது நடக்காது என்று கூறினார்.

இதுபோன்று இந்துமதத்தில் பல்வேறு மகான் கள் இளம் வயதிலேயே இறைவனிடம் ஐக்கியம் ஆகியுள்ளனர். சுவாமி விவேகானந்தர் மக்க ளின் பாவத்தை ஏற்றுக்கொண்டார்.அதனால் தீராத நோய்க்கு ஆளானார்.

மற்றவர்களின் பாவத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாமல் வெறும்உபதேசங்களை மட்டும் கொடுக்கும் யோகிகளுக்கு நோய்வருவதில்லை.



## அவசியம் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

- அலைமோதாமல் இருக்கும் நீரில் குளிக்க வேண்டும்.
- தலைக்கு வைக்கும் தலையணையைக் காலுக்கு வைக்கக் கூடாது. தலையணை மீது உட்காரவும் கூடாது.
- சாப்பிடும் போது நம் நிழல் சாதத்தில் விழக்கூடாது.
- கைவிரலை நீக்கியோ, கையை உதறியோ சாப்பிடக்கூடாது.
- சாப்பிடும் போது சோற்றை உருட்டிச் சாப் பிடக்கூடாது
- எதையும் எச்சில் பண்ணிச் சாப்பிடக்கூடாது. குடிக்கவும் கூடாது
- சாப்பிட்டு முடித்ததும் தட்டையோ, கையை யோ நக்கக்கூடாது
- தினசரி இரவில் அடுப்பில் நெருப்பை மிச்சமின்றி அணைத்துவிடவேண்டும்.
- வாயைக் கொப்புளிக்கும் நீரையோ, எச்சிலையோ வலதுப்பக்கம் துப்பக்கூடாது.
- அன்னம், நெய், உப்பு ஆகிய மூன்றையும் கையால் பரிமாறக்கூடாது. கரண்டியால் மட்டுமே பரிமாற வேண்டும்.
- தாமிரப்பாத்திரத்திலும், வெண்கலப் பாத் திரத்திலும் இளநீரை வைக்கக்கூடாது.
- ஆமணக்கு இலையிலும், பனை ஓலைக் கூடாயிலும் வைத்த பூக்களை பூஜைக்குப் பயன்படுத்தக் கூடாது.
- கடும்வெயில், மயானப் புகை, தன்னைவிட அதிக வயதுள்ள பெண்ணோடு உறவு கொள்ளுதல், இரவில் தயிர் அன்னம் சாப்பிடுதல், தேங்கிய குட்டைகளில் நீரைப் பருகுதல் ஆகியவை ஒரு மனிதனின் ஆயுளைக் குறைக்கும்
- இருகைகளாலும் தண்ணீர் குடிக்கக் கூடாது. டம்ளர் அல்லது அதற்குரிய பாத் திரங்களிலேயே நீரைப் பருக வேண்டும்.
- இஞ்சி, பாகற்காய், கஞ்சி, கட்டித்தயிர், கீரைகள், நெல்லிக்காய், வெங்காயம் ஆகியவற்றை இரவில் சாப்பிடக்கூடாது.



# இறைவழிபாட்டில் இசைக்கு ஏன் முக்கியத்துவம்?

# 72000 நாடி நரம்புகளுடன் தொடர்புடைய இசை

இசையின் மூலம் இறைவனை வழிபடுபவது, பஜனை, பாடல் என இசையை மையப்படுத்தி இறைவழிபாடு என்பது நடைபெற்று வருகிறது.

இதில் ஒருபடி மேலே சென்று மருத்துவத்திற்கும் இசை பயன்படுத்தப்படுகிறது.

அஹிர் பைரவி ராகம் இசைப்பதின் மூலம், மன உளைச்சல் செரிமான பிரச்சினை, உயர் இரத்த அழுத்தம், மனதில் அமைதி நிலவ, சுவாச குழாய் தொற்று அலர்ஜி ஒவ்வாமை , தோல் அலர்ஜி ஒவ்வாமை, மூட்டுவலிகள் ஆகியவை குணமாகும் என்று மருத்துவமும் சாதித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவு மகிமை வாய்ந்த இசையை, ஆன்மிகத்தில் நம் முன்னோர் புகுத்தியதைப் பற்றி பல்வேறு தற்கால ஆராய்ச்சிகள் வெளிப்படையாக தங்கள் முடிவை அறிவித்தவண்ணம் உள்ளது.

இசைக்கும் மனதுக்கும் தொடர்பு உள்ளது அதே மனதுக்கும் உடலுக்கும் நேரடி தொடர்பு உள்ளது.

இசையால் மகிழ்ச்சி, துக்கம் போன்ற உணர்வுகளை தூண்ட முடியும்.

சீரற்ற மனநிலையால் உண்டாகும் உடல் மன கோளாறுகளை பஞ்சபூத சமநிலையை வாத பித்த கபத்தில் சம நிலையை உண்டாக்க முடியும் என கர்நாடக சங்கீத மற்றும் ஆயுர்வேத மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

அதேசமயம்ஒருசிலஇசையைபுறக்கணிக்கவும் செய்துள்ளனர், ஆதித்ய சக்கரத்தில் 69 ஆவது மேளகர்த்தா ராகம் தாதுவர்த்தினி ராகம் இதன் பெயரிலேயே விளக்கம் உள்ளது. இதன் பலன்கள் மறைபொருளாகவே உள்ளது அல்லது மறைக்கப்பட்டு விட்டது இது பற்றி அதிகம் பேசப்படவில்லை. இசைக்க படவும் இல்லை. இதுபோல் காரணமின்றி மறைக்கப்பட்ட பல் வேறு இசை, ராகங்களும் உள்ளன, இது வேண்டுமென்றே மறைக்கப்பட்டதா, அல்லது புறக்கணிக்கப்பட்டதா என்று இன்று வரை எந்த ஆராய்ச்சியும் இல்லை.

அதே போன்று, ஒவ்வொரு நாட்டின் கலாச் சாரத்துக்கு ஏற்ப இசை மருத்துவ ஆய்வுகள் அனைத்து நாடுகளிலும் உலகம் முழுவதும் உள்ளது. இசையின் ஏழு ஸ்வரத்திற்கும், ஏழு சக்கரத்திற்கும், நவ கிரகங்களுக்கும், 72,000 நாடி நரம்புகளுக்கும், ஒவ்வொரு உயிர் செல்களுக்கும், உயிர் பிராணன் மனம் ஆன்மா என சகலத்திலும் இசையின் தொடர்பு உள்ளது.

இந்த பிரபஞ்சத்தில் இசையே இல் லாத இடமில்லை.

எங்கும் இசையே இசையின் அதிர்வுகளில் கட்டமைக்க பட்டவையே இந்த ஸ்தூல பிரபஞ் ச படைப்பு என்று ஞானிகள் முதல் விஞ் ஞானிகள் வரை தற்கால ஆராய்ச்சியின் மூலம் வெளிப்படுத்தி யுள்ளனர்.

இதனால்தான் இந்து மதத்தில் பல்வேறு இசைக்கருவிகளை ஆன் மிகத்துடன் இணைத்து நம்முன்னோர்கள் இறை வழிபாட்டை செய்தனர்.



www.aanmeegamalar.com





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com
www.aanmeegamalar.com

# எந்த கடவுளுக்கு எந்த வகையான உணவுகள் பிடிக்கும்?

தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் தினசரி இறைவனுக்கு பூஜை செய்யவேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது .நம் வீட்டில் பூஜை யறையில் தெய்வங்களை வைத்து இருந்தால் மட்டும் போதாது. நமக்கும் மேலே ஒரு சக்தி நம்மை இயக்குகிறது என முழுமையாக நம்ப வேண்டும்.

எந்த பொருள் வாங்கினாலும் முதலில் கடவு ளின் பாதத்தில் வைத்து இது நீ கொடுத்தது உனக்கு நன்றி என மனதார சொல்ல வேண்டும்.

தினமும் நாம் சமைப்பதை கடவுளுக்கு நெய் வேத்தியம் செய்து விட்டு சாப்பிடும் போது தான் நமக்கு அது பிரசாதம் ஆகிறது.

கடவுள் முக்காலமும் அறிந்தவர் அவரிடம் இல்லாதது ஒன்றும் இல்லை. நமக்கு தினமும் உணவு கிடைப்பது கடவுள் அருளால் தான். அதற்காகத்தான் நாம் அவருக்கு நன்றி செல்லி வழிபடுகிறோம் .

கடவுளுக்கு 18 வகை பட்சணத்துடன்தான் நைவேத்தியம் செய்ய வேண்டும் என்று இல்லை.

வசதி வாய்ப்புள்ளவர்கள் பழங்கள், உலர் திராட்சை, கற்கண்டு, பேரீச்சம்பழம், பால் வைத்து நைவேத்தியம் பண்ணலாம். இதுபோன்ற நைவேத்தியங்கள் அனைத்தும் கடவுளின் மீதுள்ள அன்பின் வெளிப்பாடால் பக்தர்கள் செய்வது மட்டுமே.

வசதி வாய்ப்பு இல்லாதவர்கள், இதுபோன்ற உணவுகளை நைய்வேத்தியமாக படைக்கும் வாழ்க்கைச் சூழலில் சிக்கியவர்கள் கூட, தங்களுக்கு கிடைக்கும் உணவில் ஒருபகுதியை இறைவனுக்கு நைய்வேத்தியமாக படைத்த பின் அதை உண்ணலாம்.

ஆடம்பரமாக படைக்கும் நைய்வேத்தியத்தை விட அன்பால் படைக்கும் எளிய நைவேத்தியத் தை இறைவன் மனமுவந்து ஏற்றுக் கொள்வான், இதற்கு பல்வேறு புராணக்கதைகள் உண்டு.

குறிப்பாக இறைவனுக்கு படைக்கும் நைவேத்தியத்தில் ஒருசில தெய்வங்களுக்கு விருப்பமான நைய்வேத்தியமாக நமது முன்னோர் படைத்ததைப் பற்றி பார்ப்போம்.



# நைவேத்தியம்

### கணபதி

மோதகம், அவல், சர்க்கரைப் பொங்கல், கொண்டைக் கடலை, அப்பம், முக்கனிகள்.

### விஷ்ணு

விஷ்ணுவுக்குப் பிடித்த உணவு என்று தனியாக எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், மஞ்சள் நிறத்தில் இருக்கும் நைவேத்திய உணவென்றால் மகாவிஷ்ணுவுக்கு இஷ்டம் என்பது ஐதீகம். மஞ்சள் நிற சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, லட்டு.

### முருகன்

வடை, சர்க்கரை பொங்கல், வேக வைத்து தாளித்த கடலை பருப்பு, தினை மாவு. பழங்கள், வெல்லம், பஞ்சாமிர்தம்.

### கண்ணன்

கிருஷ்ணாவதாரக் கண்ணனுக்கு

# கடவுளுக்கு பிடித்த உணவை படைப்போம்

வெண்ணெய்யும், அவலும் என்றால் ப்ரியம் என்று சொல்கிறது குசேலர் கதை.

### சரஸ்வதி

கல்விக்கு அதிபதியான சாரதாம்பிகைக்கு வெண்பொங்கல் என்றால் ப்ரியம்.

### சிவன்

வெண் பொங்கல் ,வடை, வெறும் சாதம், பாலில் குங்குமப்பூ சேர்த்துப் படைத்தல் போன்ற வற்றை சிவபெருமானுக்கு விருப்பம்.

### மகாலஷ்மி

செல்வத்துக்கு அதிபதியான மகாலஷ்மிக்கு அரிசிப் பாயசம் என்றால் இஷ்டம். பாயசம் மட்டுமல்ல. அனைத்து இனிப்பு வகைகளும் அவளுக்கு இஷ்டமே!

### துர்கை

துர்கைக்கு பாயசம், சர்க்கரை பொங்கல், உளுந்து வடை .

### ஐயப்பன்

மணிகண்டனான ஹரிஹரனுக்கு அரவணப் பாயசம் என்றால் இஷ்டம்.

### ஹனுமன்

சிவப்பு நிறத் துவரம் பருப்புடன் வெல்லம் சேர்த்துச் செய்கிற பண்டங்கள் ஹனுமனுக்கு ரொம்ப இஷ்டம்.

### அம்மன்

மாரியம்மன், பாளையத்தம்மன், கௌமாரி யம்மன், கருமாரியம்மன், காளியம்மன் என தமி ழகத்து அத்தனை அம்மன்களுக்கும் ஆடிக்கூழ் அத்தனை இஷ்டம்.

### சனி, ராகு, கேது

மூவருமே அரைத் தெய்வ, அரை அசுர ரூபங்கள் என்பதால் இவர்களுக்கு கருப்பு நிற உணவுப் பொருட்களான கடுகு, கருப்பு எள்ளில் செய்த உணவுகள் ரொம்பப் பிடிக்குமாம்.

### குபேரன்

லட்டு மற்றும் சீதாப்பழ பாயசம் பிடித்த உணவு.

# அரச பதவியை தரும் யாகம்

சித்திரநாதன் என்ற மன்னன் மிகுந்தபுத்திசாலியாகவும், வலிமை வாய்ந்தவனாக திகழ்ந்தான், ஒரு முறை தேவேந்திரனோடு மோதியதில் பராக்கிரமிக்க மன்னனுக்கு வெற்றியும் கிடைத்தது.

இவன் ஆட்சியில், குடிமக்கள் ஒரு குறையுமின்றி செல்வ செழிப்போடு வளமையோடு வாழ்ந்து வந்தார்கள். அரண்மனை பொக்கிஷங்கள் குறைந்த நிலை ஒருபோதும் வந்ததில்லை. தோல்வி என்பதை அவன் சந்தித்ததே இல்லை.

இப்படியே வாழ்க்கை சென்றுக்கொண்டிருந்த போது, அவனுக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

"எனக்கு இப்படிப்பட்ட வாழ்வும், வசதியும் தோல்வி என்பதே அறியாத நிலையும் எப்படி கிடைத்தது" என்று எண்ணி வியந்து ஆராய்ந்தான்.

இப்பிறவியில் நமக்குக் கிடைத்த வளமைகள், எந்த நல்வினைப் பயனால் கிடைத்தது என அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டான்.

இதற்கான விளக்கம் மனதிற்குள் வரவில்லை. மேலும் எந்த நல்வினைப் பயனின் காரணத்தை தெரிந்தே ஆக வேண்டும் என்ற வேட்கை உணர்த்தியது.

இதனால், தன் குலகுருவான வசிஷ்டரை அரண்மனைக்கு வரும்படி அழைத்தார்.

அவரிடம், "சுவாமி!, யாம் விரும்பியபடியே எல்லாம் சந்தோஷமாக இருக்கின்றன, நடக்கின்றன. எந்தவித கவலையில்லாமலும் மக்களும் சந்தோஷமாக இருக்கிறார்கள். இது எதனால் எனக்கு கிடைத்தது" என தன் மனதில் ஓடிய கேள்வியை கேட்டான் மன்னன்.

அதற்கு வசிஷ்டர்,

"நீ முன் பிறவியில் செய்த நல்வினைப் பயனால் உண்டான இப்புண்ணியமே, இப்போது உனக்கான நல்வாழ்வோடு மக்களுக்கும் சேர்ந்து கிடைத்துள்ளது."

"அப்படியென்ன புண்ணியத்தை நான் செய்தேன் என தெரிந்து கொள்ள முடியுமா? சுவாமி!"

"முன்பு அவந்திப்பட்டிணத்தில், தர்மதொண்டன் என்பவர் ஆட்சி செய்து கொண்டிருந்த சமயம். அவரின் பெயருக்குள் இருப்பதுபோல, தான தர்ம தொண்டுகளை அவர் நிறைய செய்து வந்தார். ஆனாலும், அங்குள்ள மக்களில் ஒரு ஏழையானவன் மிகவும் வறுமையில் உழன்று வாடினான்.

நாட்டில் மழையும் பெய்யவில்லை. தாணியமும் விளைவில்லை. இதனால் விவசாய கூலி வேலை இல்லை. அவனால் பஞ்சம் பட்டினியாக இருக்க நேர்ந்தது.

வேறிடம் அகன்று வயிற்றிக்கு வழியேற்படுத்திக் கொள்ள, காட்டிற்குச் சென்று தஞ்சம் புகுந் தான். காட்டிலே என்ன கிடைக்கும்?, இவன் முன்னால் முயல் ஒன்று தரையை குழிபறித்து எதையோ உண்ணுவிட்டுச் சென்றதைப் பார்த்தான்.

முயல் பறித்த குழியில் மண்ணோடு மண்ணாக ஒரு வகைக் கிழங்கு விளைந்திருந்ததைக் கண்டு, இவனும் அதுபோல பல இடங்களில் குழியை பறித்து கிழங்கை சேகரித்து அவனும் அவன் மனைவியும் உண்டு வந்தனர்.

நாளடைவில் காட்டிலும் அக்கிழங்குகள் கிடைக்க அரிதாகவே, காட்டிலே சிதறிக் கிடக்கும் சுள்ளிகளை பொறுக்கி கூப்பு சேர்த்துக் கொண்டு வந்து, ஊருக்குள் விற்று, அதில் கிடைக்கும் காசை வைத்து பசிப்பிணியைப் போக்கி வந்தான்.

ஒரு நாள் நகருக்குள் விற்பனைக்காகக் கொண்டு சென்ற விறகுகட்டு விற்கவில்லை. பல தெருவில் அலைந்து கேட்டும் விறகை யாரும் வாங்கிக் கொள்ளவில்லை.

அன்றைய தினம், பௌர்ணமி. கிரகண நேரம் அது. ஒரு வியாபாரியின் வீட்டில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது.

விறகு விற்பனையாகாத தம்பதியினர் நின்று வேடிக்கை பார்த்தனர்.

ஹோமம் செய்து கொண்டிருந்த வேதியர்கள் வியாபாரியிடம், குளிர் அதிகமாக உள்ளது. ஹோம இடத்தைச் சுற்றி தீத்தனுப்பு தீர ஏற்பாடு செய்யுங்கள் என்றனர்.

அங்கே நின்றுகொண்டிருந்த இவர்களை அனுகிய வியாபாரி, நீ வைத்திருக்கும் விறகினைக் கொண்டு, இந்த இடங்களில் தீத்தனுப்பு ஏற்படுத்துக என கூறினார்.

இவர்களும் விற்பனைக்குக் கொண்டு வந்த விறகுச் சுள்ளிகளை பல இடங்களில் பொதிய வைத்து அணலை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ஹோமம் முடிந்து வேதியர்கள் புறப்படுகையில், வேதியர்கள் ஒவ்வொருவருக்கும் பொன் பொதிந்த சுருக்குப் பையை கொடுத்துப்பினார் வியாபாரி.

இதைக்கண்டு, ஏழையானவன் நினைத்தான்!. ஆகா!, இது கிரகண காலமோ! அதான் ஹோமம் செய்த வேதியர்களுக்கு, பொற்காசுகளைக் கொடுத்து அனுப்புகின்றனரோ என நினைந்தான்.

அதே சமயம், இந்த உத்தமமான நேரத்தில் யாகம் செய்த வேதியருக்கு பொருள் கொடுப்பது சிவபெருமானுக்கே கொடுப்பதற்கு சமமாகுமே... ஆனால் நம்மிடம் கொடுப்பதற்கு பொருள் ஒன்றும் இல்லையே?

இன்று விறகு விற்காததால் நம்மிடம் காசும் இல்லையே?, என நினைத்து சோர்ந்து உட்கார்ந்தான்.

அப்படி அமர்ந்த நிலையிலையே அவன் மனதிற்குள், அவ்வேதியர்களுக்கு விறகுகளை தானம் செய்வதாக, கற்பனை செய்து கொண்டு.

அப்போதிருந்த அந்த ஏழைதான் நீ...!

மனதாலே தானம் செய்த உன் செயலுக்கு அன்றைய புண்ணியம் பலன், இப்பிறவியில் உனக்கு வரவு வைக்கப்பட்டது.

இன்று பராக்கிரமிக்க சித்திரநாதனான நீ, அன்று செய்த புண்ணியம் பலனாக, இன்று அரச பீடத்தில் அமர்ந்து செழுமையாக இருக்கிறாய்" என்றார்.

இப்பொழுது உன் முன்நிகழ்வை தெரிந்து கொண்டாயா? என்றார் வசிஷ்டர்.

யாகத்தை செய்தாலோ அல்லது யாகம் செய்வதற்கு தேவையான உதவி செய்தாலோ. மிகப்பெரிய பலன்கள் கிடைக்கும் என்பதற்கு சித்திரநாதன் வரலாறு கூறுகிறது.



# புற்றுநோயை குணப்படுத்திய மந்திரம்

காஞ்சி மகாபெரியவர் திவ்ய யாத்திரைகள் முடித்துவிட்டு மீண்டும் காஞ்சி மடத்திற்கு வந்து அங்கேயே முகாமிட்டிருந்த காலகட்டம் அது..

அந்த சமயத்தில் ஒருநாள் பரமாச்சார்யாளை தரிசிக்க வந்த கூட்டத்தில், நடுத்தர வயதுள்ள ஒரு தம்பதியரும் இருந்தார்கள். அந்த மனைவிக்கு ஏதோ உடல்நலக் குறைபாடு என்பது சாதாரணமாகப் பார்த்தவர்களுக்கே தெரிந்தது. தாங்க முடியாத வலியின் காரணமாக தவித்துக்கொண்டிருந்தார்.

இப்போது வெளியில் வரட்டுமா? அல்லது இன்னும் கொஞ்சம் கழித்து வழியட்டுமா? என்று கேட்பதுபோல் அவரது கண்களில் நீர் திரண்டு கொண்டிருந்தது. உடன் வந்திருந்த அவளது கணவர் மெதுவாகப் பேசி, அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். மனைவியின் தவிப்பில் அவரது மனம் எவ்வளவு சங்கடப்படுகிறது என்பதை அவரது முகத்தோற்றமே படம்பிடித்துக் காட்டியது.

மெதுவாக நகர்ந்த வரிசையில் தங்களுடைய முறை வரும்வரை பொறுமையாக நகர்ந்த அவர்கள், மகாபெரியவா முன் சென்று நின்றார்கள்.

இருவரும் ஒரு வார்த்தைகூட பேசுவதற்கு முன், "என்ன, ரொம்ப வலிக்கறதா? இதுக்கெல்லாம் மருந்து மாத்திரை மட்டும் போதாது. கொஞ்சம் மந்திரமும் வேணும்!" சொன்ன மகாபெரியவா, தன் பக்கத்தில் இருந்த அணுக்கத் தொண்டரைக் கூப்பிட்டு, ஏதோ சொன்னார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த சீடர் ஒரு பேப்பரில் எதையோ எழுதி எடுத்துக் கொண்டு வந்து மகாபெரியவா முன் நீட்டினார். அதை அப்படியே பார்த்த மகாபெரியவா, "சரியா எழுதி இருக்கியா? ஒரு தரம் படிச்சுக்காமி!" என்றார்.

காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்ததை அந்த சீடர், சத்தமாகப் படித்தார்.

“அஸ்மின் பிராத்மன் நநூ பாத்ம கல்பே
தவம் இத்தம் உத்தாபித பத்மயோனி
அநந்தபூமா மம ரோகராசிம் நிருந்த்தி
வாதாலய வாச விஷ்ணோ”

சீடர் படித்து முடித்ததும்,

"இது, ஸ்ரீமந் நாராயணீயத்துல இருக்கற ஸ்லோகம்! இதோட அர்த்தம் தெரியுமா உனக்கு? எங்கே சொல்லு பார்க்கலாம்!" என்று கேட்டார்.

"பெரியவா, உங்களுக்குத் தெரியாததில்லை. இது குருவாயூரப்பனைப்பத்தினை துதி. 'பரமாத்மாவாக எங்கும் நிறைந்திருக்கும் குருவாயூரப்பனே, பத்ம கல்பத்தில் ப்ரம்மதேவனைத் தோற்றுவித்தவன் நீ. அளவற்ற மகிமையுடையவனாகிய நீயே எனது உடல் மனம் சார்ந்த எல்லா பிணிகளையும் நீக்கி ஆரோக்யம் அளிக்க வேண்டும்!' அப்படின்னு அர்த்தம்!"

பவ்யமாகச் சொன்னார், சீடர்.

"என்ன, ஸ்லோகத்தை நன்னா கேட்டுண்டேளா? இதை நூத்தியெட்டுத் தரம் நம்பிக்கையோட சொல்லு..நல்லதே நடக்கும்!" சொல்லி மாதுளம் பழம் ஒன்றைக் கொடுத்து அனுப்பினார், மகாபெரியவா.

அந்தத் தம்பதியும் ஆசார்யாளை நமஸ்காரம் செய்துவிட்டு பிரசாதத்தை வாங்கிக் கொண்டு சென்றார்கள். ஆசார்யாளோ, அங்கே இருந்த வேற யாருமோ அந்தப் பெண்மணிக்கு என்ன உபாதைன்னு கேட்கவே இல்லை.

இந்த சம்பவம் நடந்து நாலஞ்சு மாசம் இருக்கும். அந்தத் தம்பதியர் மறுபடியும் மகாபெரியவாளை தரிசிக்க காஞ்சிபுரத்துக்கு வந்தார்கள். இந்த முறை அந்தப் பெண்மணியின் முகத்தில் வலியின் ரேகை கொஞ்சம்கூட இல்லை. அவள் கணவரது முகமும் தெளிவாகவே இருந்தது.

அமைதியாக வரிசையில் நடந்து, மகாபெரியவர் முன் சென்று நின்றார்கள். "என்ன நோய் போய்டுத்துன்னு டாக்டர்கள் சொல்லிட்டாளா? இனிமே ஒன்னும் பிரச்னை இல்லை. க்ஷேமமா இருங்கோ!" ஒன்றும் கேட்காமலே ஆசிர்வதித்தார் மகான்.

அவ்வளவுதான், கண்ணில் இருந்து நீர் பெருகி வழிய அப்படியே நெடுஞ்சாண் கிடையாக அவரது திருப்பாதத்தில் விழுந்தார் அந்தப் பெண்மணியின் கணவர்.

"தெய்வமே...என் மனைவிக்கு மார்புல புற்றுநோய் இருக்கு. அதை குணப்படுத்துவது கஷ்டம். ஆபரேஷன் பண்ணினாலும் ரொம்ப முத்திட்டதால பலன் இருக்குமான்னு தெரியாது! னு டாக்டர்கள் எல்லோரும் கைவிட்டுட்டா. மன அமைதியாவது கிடைக்குமேன்னுதான் போனதடவை இங்கே வந்தோம். ஆனா, என்ன பிரச்னைன்னே கேட்காம, அது தீர்ந்து இவளோட உடல்நிலை சீராகறத்துக்கு ஒரு வழியையும் காட்டின உங்க கருணையை என்னன்னு சொல்றது!" என்று உரத்த குரலில் சொல்லிக் கதறி அழுதார் அவர்.

"இதெல்லாம் நான் ஒன்னும் பண்ணலை. அந்த நாராயண மந்திரத்தை நீங்க நம்பிக்கையோட சொன்னதுக்குக் கிடைச்சிருக்கிற பலன்..க்ஷேமமா இருங்கோ...ஒரு குறையும் வராது!" புன்னகையோடு சொல்லி ஆசிர்வதித்தார்.



# தங்கம் செய்யும் செயல்முறையை பாதுகாக்கும் கருப்பசாமி

## சதுரகிரி தைலக் கிணற்றின் கதை!



சிருங்கேரிக்கு அருகில் வாலைபுரம் கிராமத்தில் சிறந்த சிவபக்தனான வாமதேவன் என்னும் பிரபலமான வணிகன் ஒருவன் இருந்தான்.தனது கிராமத்திலேயே சிவனுக்கு மிகப் பெரிய ஆலயம் ஒன்று அமைக்க வேண்டுமென விரும்பினான்.

தேர்ந்த சிற்பிகளையும், கட்டிடகலை வல்லு னர்களையும் வரவழைத்து, ஒரு நல்ல நாளில் ஆலயப் பணிகளைத் துவங்கினான்.

ஆகம விதிகளின் படி கோவில் கட்டுவது அவ்வளவு இலகுவான காரியமா என்ன? அவனது சேமிப்புக்கள் எல்லாம் செலவு செய்தும் ஆலயப் பணிகள் நிறைவடைய வில்லை.

இதனால், ஆலயப் பணியை நிறைவு செய்ய வேறு பல செல்வந்தர்களின் உதவியை நாடி னான். இங்கேதான் அவனுக்கு சோதனைகள் ஆரம்பமாகியது.

செல்வந்தனாய் இருந்தவன் தற்போது மிகவும் வறிய நிலையில் இருப்பதனால், தான் இழந்த செல்வங்களை நன்கொடை என்ற பெயரில் மீட்டுக் கொள்ள முனைவதாக எண்ணிய அவர்கள் நன்கொடை தர மறுத்து விட்டனர்.

எவ்வாறு கோவில் பணிகளை பூர்த்தி செய்வதென்று வருந்தியிருக்கையில் அந்தக் கிராமத்திற்க்கு ஒரு முனிவர் வந்திருப்பதாக அறிந்து அவரிடம் சென்று தனது நிலைமையைக் கூறினான்.

அதற்க்கு அந்த முனிவர், "நீ ஆலயத்தைக் கட்டி முடிக்கவே பொருள் தேடுவது உண்மை என்றால், பெருமை பொருந்திய சதுரகிரி மலை யில் தவத்தில் இருக்கும் சித்தரான காலங்கி நாதரிடம் சென்று உனது குறையைக் கூறு, அவர் உனக்கு வழிகாட்டுவார்" என்றார்.

தனது துயரம் தீர வழிகிடைத்த மகிழ்ச்சியில் முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு, சதுரகிரி மலைக்குச் சென்றான்.அங்கு காலங்கி வனத்தில் புலித்தோலாசனத்தில் அமர்ந்து கொண்டு தவம் செய்து கொண்டிருந்த காலங்கி நாதரைக் கண்டு வணங்கி நின்றான்.

கண்விழித்த காலங்கி நாதரும் வாமதேவனை கண்டு, அவன் யாரென்றும், வந்த காரணம் என்னவென வினவினார். அவனும் தான் மேற்கொண்ட கோவில் திருப்பணி பற்றிச் சொல்லி அதை கட்டி முடிப்பதற்கான உதவி வேண்டி அவரை சந்திக்க வந்ததாக கூறினான்.

சித்தருக்கு அவனின் வார்த்தைகளில் உள்ள உண்மை தெரிந்தும், அவனைச் சோதிக்க எண்ணி மௌனமாக இருந்தார்.

சித்தரின் மௌனத்தை பார்த்த அவன் அவ ருக்கும் தன மேல் நம்பிக்கை இல்லை என்று எண்ணி, அவர் உதவும் வரை அங்கேயே இருப்பது, உதவி கிட்டவில்லை என்றால் அவர் காலடியில் உயிர் துறப்பது என்று முடிவு செய்து அங்கேயே தங்கி, அவருக்கு பணிவிடைகள் செய்து வரலானான்.



அவனின் திருப்பணி மீதுள்ள பற்றையும், தீவிரத்தையும், தூய உள்ளத்தையும் கண்ட சித்தர் அவனுக்கு பொருள் வேண்டி ரசவாதம் செய்யத்தொடங்கினார்.

உரோம வேங்கை, உத்திர வேங்கை, கருநெல்லி உட்பட பல மூலிகைகளையும், முப்பத்திரண்டு வகைப் பாஷாணங்களையும், முப்புக்களையும் கொண்டு வகாரத் தைலம் தயாரித்து, அதன் மூலம் உலோகங்களை தங்க மாக்கி வேண்டியமட்டும் வாம தேவனுக்குக் கொடுத்து, ஆசிவழங்கி வழியனுப்பினார். அவ னும் மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பி கோவில் திருப் பணியினை சிறப்பாக முடிவித்தான்.

ஆலயப் பணிக்காக அதிகளவு பொன் வேண்டி தயாரிக்கப் பட்டதால் வகாரத் தைலம் மீதம் இருந்தது. காலங்கிநாதர் மீதமிருந்த தைலத்தை, அங்கு பூமிக்கு கீழ் கற்கிணறு ஒன்றை அமைத்து அதில் ஊற்றி கற்பலகையால் மூடி நான்கு திசைகளுக்கும் நான்கு தேவதைகளைக் காவல் வைத்தார்.

பொருளாசை கொண்டோர் எவரும் அந்தக் காவலை மாந்திரீக பூசை முறை மூலம் துஷ்ட தேவதைகளைக் கொண்டு முறியடித்து திருட் டுத் தனமாக அந்தத் தைலத்தை யாரும் கொண்டு போகக் கூடாது என்று கருப்பண்ண சாமியிடமும், பேச்சி அம்மனிடமும் தலைமைக் காவல் பொறுப்பைக் கொடுத்தார்.

சதுரகிரியில் பிலாவடிக் கறுப்பர் ஆலயத்தின் பின்புறம் இன்றைக்கும் அந்த வகாரத் தைலக் கிணறு உள்ளது என்றும், நம் போன்ற சாமா னியர்களுக்கு அது தெரியாது என்றும் சொல் கிறார்கள்.





www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



# தாயத்தின் மகத்துவமும் பயனும்

தாயத்து அல்லது தாயித்து எனப்படுவது, மந்திரத் தகடு அடங்கிய அணி அல்லது ஆபரணம் ஆகும். இவை தனிப்பட்ட மனிதர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதன் பொருட்டு உருவாக்கப் படுபவை. இவை பெரும்பாலும் சிறிய உலோக உருளை வடிவத்தில் இருக்கும். இதனுள் சிறிய யந்திர தகடு, மந்திரங்களினால் உருவேற்றப் பட்டு அடைக்கப் பட்டிருக்கும்.

தாயத்துகளில் பயன்படுத்தப் படும் யந்திரங் களுக்கும் பூஜையில் வைத்து வணங்கப் படும் யந்திரங்களும் வெவ்வேறானவை.

தாயத்துகளுக்கான யந்திரங்கள் உருவத்தால் சிறியவை, மேலும் இதனுடன் வேர், புனுகு, ஜவ்வாது, திருநீறு, மேலும் சில எண்ணெய் வகைகள் சேர்த்தே தாயத்தில் அடைப்ப துண்டு.

தாயத்தில் அடைக்கப் படும் யந்திரங்கள் குறிப்பிட்ட சில மனிதர்களின் கு ன ங் களுக்கேட்ப தொழிற படுபவை, ஆனால் ஓரிடத்தில் வைத்து வணங்கும் யந்திரங்கள் பெரும்பாலும் பரந்த சக்தியை உடையவை.

உலகம் முழுதும் பல்வேறு சமுகம் மற்றும் சமயத்தார் காலம் காலமாய் தாயத்துகளை பயன் படுத்தி வருகின்றனர். சித்தர்களும் தங்களுக்கே உரிய தனித்துவமான முறையில் பல தாயத்துக்களை பழக்கத்தில் வைத்திருந்தனர்.

இவை பெரும்பாலும் தங்களின் சீடர்களின் பயன்பாட்டிற்காக உருவாக்கப் பட்டவை. கொடிய வன விலங்குகள் அணுகாமல் இருக்கவும், உயிர் கொல்லும் விஷ ஜந்துக்களிடம் காப்பாற்றவும், மேலும் வைத்திய காரணங்களை முன்னிருத்திய மருத்துவ தாயத்துகளையும் உருவாக்கி பயன் படுத்தி வந்தனர்.

இவற்றை தயாரிக்கும் முறைகள் ரகசிய மானவை. இதன் விவரங்களை தங்களின் பாடல் களில் சொல்லியிருக்கின்றனர்.

தற்போது வணிக ரீதியாக விற்கப் படும் தாயத் துகள் பலவும் போலியானவை.இவை பலருக்கும் உரிய பலனை அளிக்காததனால் தாயத்துகள் குறித்த அவநம்பிக்கை பொதுவில் மேலோங்கி இருக்கிறது. ஆனால் சித்தர்கள் அருளிய முறை யில் உருவாக்கப் படும் தாயத்துக்கள் சக்தி வாய்ந்தவை.







# சித்தத்திற்குப் பின்னால் இறைசித்தம் இருக்கிறது

சுவர்க்கத்தில் உங்களுடைய இறுதியான வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “ நீங்கள் உங்களுடைய ஆன்மீக நம்பிக்கைகளை அனுபவிக்க முயற்சிக்கும்பொழுது, உங்களுக்கு மற்றொரு உலகம் திறந்து விடப்படத் துவங்குகிறது. நீங்கள் ஒரு மாதாகோவிலில் சேர்ந்துவிட்டதாலேயே நீங்கள் காப்பாற்றப்பட்டு விடுவீர்கள் என்று நம்பி, பொய்யான பாதுகாப்பு உணர்வில் வாழாதீர்கள். நீங்கள் தானாகவே இறைவனை அறிவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். நீங்கள் தீவிர சமயப்பற்று உடையவர்கள் என்று உங்கள் மனம் திருப்தியுறலாம், ஆனால் உங்களுடைய பிரார்த்தனைகளுக்கு நேரடியான பதில் கிடைத்து உங்கள் உள்மனம் திருப்தி அடைந்தாலொழிய, சம்பிரதாயமான மதம் எந்த அளவு ஆனாலும் சரி, உங்களைக் காப்பாற்ற முடியாது. இறைவன் பதில் அளிக்காவிடில் அவனிடம் பிரார்த்தனை செய்வதில் என்ன பலன்? அவனுடைய மறுமொழி கிடைப்பது, கடினமானதுதான் என்றாலும், இது முடியும் காரியம்தான். சுவர்க்கத்தில் உங்களுடைய இறுதியான வருகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உங்களுடைய பிரார்த்தனைகளின் சக்தியை, அவை பலனளிக்கும்வரையில் நீங்கள் சோதித்துப்பார்க்கவேண்டும். சிறு குழந்தையாக இருக்கையிலேயே நான் பிராத்தனை செய்யும்பொழுது என்னுடைய பிரார்த்தனைக்குப் பதில் கிடைத்தாக வேண்டும் என்று என் மனதில் தீர்மானித்துக்கொண்டேன். அத்தகைய தீர்மானம்தான் சரியான வழியாகும். அப்பொழுது ஒவ்வொரு சோதனையும் உங்களுடைய உறுதிப்பாட்டைச் சீர்குலைக்க வரும். ஆனால் பதிலளிப்பதற்கான இறைசக்தி எல்லையில்லாதது; உங்களுடைய விடாப்பிடியான தொடர்ந்த மன உறுதி இறைவனுடைய பதிலை நிச்சயமாகக் கொண்டுவரும்.”

“உங்களுடைய எண்ணங்களை ஒருமுனைப் படுத்த நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். எனவே தனிமையாக இருப்பதற்கு நேரம் ஒதுக்குவது முக்கியம். எப்பொழுதும் மற்றவர்களுடன் சேர்ந்திருப்பதைத் தவிர்த்திருங்கள். அவர்களில் அநேகர் உறிஞ்சும் பஞ்சு போன்றவர்கள். அவர்கள் உங்களிடத்திலிருந்து எல்லாவற்றையும் உறிஞ்சிவிடுவர். பதிலுக்கு நீங்கள் எதையும் பெறமாட்டீர்கள். மற்றவர்கள் உண்மை யானவர்களாகவும் வலிமை வாய்ந்தவர்களாகவும் இருந்து, ஒவ்வொருவரும் அடுத்தவருடைய உண்மையையும் வலிமையையும் உணர்ந்து இருப்பார்களேயானால், அவர்களுடன் நீங்கள் சேர்ந்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும். அதன் மூலம் நீங்கள் உன்னத ஆன்மீக குணங்களை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளலாம்.”

மேலும் அவர் கூறுகிறார்: “ நீங்கள் வெறுமனே உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். மிக அநேகர் பயனற்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று கேளுங்கள். அவர்கள், “ ஓ, நான் ஒவ்வொரு நிமிடமும் மும்முரமாயிருக்கிறேன்! “ என்று வழக்கமாகக் கூறுவார்கள். ஆனால் அவர்கள் எதைப்பற்றி மும்முரமாயிருந்தார்கள் என்பதை அவர்கள் நினைவு கூர்வது அபூர்வம்! பற்பல பொழுதுபோக்குகள்கூட உங்கள் மனோபலத்தை வலுவிழக்கச் செய்துவிடுகின்றன. நீங்கள் தினந்தோறும் திரைப்படங்களுக்குச் சென்றால் அவைகளின் கவர்ச்சி குன்றிவிடும். நீங்களும் அலுத்துப் போய்விடுவீர்கள். திரைப் படங்கள் எல்லாம் அடிப்படையில் ஒரே மாதிரியானவை காதலர்கள், கதா நாயகர்கள், வில்லன்கள். நாம் ஓர் அருமையான திரைப்படக் கதையை ரசிக்கலாம். ஆனால் வாழ்க்கை அதுபோல் அமைவது அரிது; மாறாக அது மிகவும் யதார்த்தமாக இருந்தால், பொழுதுபோக்கிற்காகச் செல்லும் பொழுது வாழ்க்கையில் உள்ளதையே இன்னும் அதிகமாகப் பார்க்க யார்தான் விரும்புவர்?"



“வாழ்க்கை மிகவும் தந்திரமானது. நாம் அதனை அதன்படியே கையாள வேண்டும். நாமே அதை முதலில் அடக்கி ஆளவில்லை என்றால், மற்ற எவருக்கும் நம்மால் உதவ முடியாது. ஒருமுனைப்பட்ட எண்ணம் என்ற ஏகாந்தத்தில்தான் எல்லா சாதனைகளின் உற்பத்தி இடம் மறைந்துள்ளது. அதை நினைவில் கொள்ளுங்கள். இந்த உற்பத்தி நிலையத்தில், எதிர்த்து நிற்கும் இன்னல்களை வெற்றிகொள்வதற்கு உங்களுடைய மன உறுதியின் வடிவமைப்பை தொடர்ந்து செய்து வாருங்கள். உங்களுடைய மன உறுதியை தொடர்ந்து செயல்படுத்துங்கள். நீங்கள் நேரத்தை வீணாக்காமலிருந்தால், இரவும், பகலும் இந்த உற்பத்தி நிலையத்தில் வேலை செய்வதற்கு உங்களுக்கு அநேக சந்தர்ப்பங்கள் கிடைக்கும். இரவில்தான் இந்த உலகின் தேவைகளிலிருந்து விலகிக்கொண்டு, நான் நானாகவே இருந்து, இந்த உலகத்திற்கு முற்றிலுமான அன்னியனாகிறேன்; அது ஒரு வெற்றிடம் என்று மனோசக்தியுடன் மட்டும் இருந்துகொண்டு நான் குறிப்பாக எதைச் செய்ய விரும்புகிறேன், அதை எப்படிச் செய்யவேண்டும் என்று என் மனதில் நான் தீர்மானம் செய்யும் வரையில் எனது எண்ணங்களை விரும்பிய திசையில் திருப்புகிறேன். பின்பு எனது மனோபலத்தைச் சரியான காரியங்களில் பிரயோகிக்கிறேன்; அது எனக்கு வெற்றியைத் தருகிறது. இந்த முறையில் பல தடவைகள் எனது மனோ சக்தியை பலனளிக்கும் வகையில் பயன்படுத்தி இருக்கிறேன். ஆனால் மனோசக்தியை, தொடர்ந்து பிரயோகித்தாலொழிய அது செயல்படாது.”

மேலும் அவர் கூறுகிறார்: “எனது மனோ சக்தி இறைவனுடைய சித்தத்தால் கூடுதல் சக்தியூட்டப்பட்டு எனது லட்சியத்தை நிறை வேற்றும்,” என்று சொல்ல முடிவதும் அறிய முடிவதும் ஓர் அற்புதமான உணர்வாகும். நீங்கள் சோம்பேறித்தனமாக எல்லாவற்றையும் தெய்வ சக்தியிடம் விட்டுவிட்டு இறைவன் கொடுத்த உங்கள் மனோதிடத்தைப் பயன்படுத்துவதைச் செய்யத்தவறினால், பலன்கள் கிட்டாது. தெய்வசக்தி தானாகவே உங்களுக்கு உதவ விரும்புகிறது. நீங்கள் அதனிடம் நயந்து பேசி இணங்கச் செய்ய வேண்டியதில்லை.. ஆனால் இறைவனின் குழந்தை என்ற முறையில் அவனிடம் உரிமையுடன் கேட்கவும். அவனுடைய குழந்தையாகவே நடந்து கொள்ளவும். உங்கள் மனோசக்தியை நீங்கள் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும். இறைவன் தன்னுடைய அற்புதமான சக்தியுடன் எங்கோ தூரத்தில் உள்ள சுவர்க்கத்திலிருக்கிறான்; மேலும் நீங்கள் இங்கே பூமியில் இன்னல்களில் உழலும் ஓர் ஆதரவற்ற சிறுபுழு என்ற எண்ணத்தை நீங்கள் அகற்றி விடவேண்டும். உங்களுடைய சித்தத்திற்குப் பின்னால் வல்லமை வாய்ந்த இறைசித்தம் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் அந்தப் பெருங்கடல்போன்ற சக்தி, நீங்கள் கிரகிக்கும் திறன் பெற்றிருந்தாலொழிய உங்களுக்கு உதவ முன்வராது”.

80
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# நோய் நம்மை தாக்கி விடுமோ?

அன்னையின் அற்புத பதில்

அன்னையிடம் பல்வேறு சமயங்களில் பல் வேறு கேள்விகள் கேட்கப்பட்டு, அவரிடம் பெறும் பதில்களில் சீடர்கள் பயன்பட்டதுண்டு. அந்த வகையில் ஒருசில கேள்விகள் ஒரு சில சமயங்களில் மிகப் பயனுள்ளதாக இருந் திருக்கிறது.

தற்போது உலகமே கரோனா பீதியில் முழித்து திண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் இதற் கேற்ற ஒரு கேள்விக்கான விடையை அன்றே அன்னை அவர்கள் கூறி வைத்துள்ளார், அதைப் பற்றி பார்ப்போம்....

கேள்வி; இனிய அன்னையே, ஒருவன் நோய்த்தாக்கம் வருகிறது என்று உணர்ந்தவுடன் அதை எப்படித் தடுக்கலாம்!

முதலில் நீயும் உனது உடலும் நோய் வரும் என்பதை ஏற்கக்கூடாது. உனக்கு நோய் வராது என்ற வலிமையான இச்சாக்தியை (கீவீறீறீ) உருவாக்கவேண்டும். இதுவே முதல் நியதி.

இரண்டாவது நியதி ஒளியை அழைக்க வேண்டும்; உன்னை சம நிலையில் வைத்திருக் ககூடிய, அமைதியாக வைத்திருக்கக்கூடிய அந்த ஒளியை உனது உணர்வினால் உனது கலங்கள் அனைத்திற்கும் செலுத்த வேண்டும். நோய் வரக்கூடாது என்ற உணர்வு பயத்தினால் இருக்கக்கூடாது. அது நோயினை வரவேற்கும் காரணி.

நோய்வரக்கூடாது என்ற வலிமையான இச்சா சக்தி மட்டுமே இருக்க வேண்டும்; நோய் வந்துவிடக்கூடாது என்ற பயம் இருக்கக் கூடாது, நீ நிச்சயமாக அந்தப்பேரொளியால் பாதுகாக் கப்படுகிறாய் என்ற உறுதியும், அந்தப்பேரொளி கவசமாக உன்னைப் பாதுகாக்கிறது என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். இந்தக் காலப்பகுதியில் நோயைப் பற்றி சிந்திக்காமல் வேறு பயனுள்ள விஷயங்களில்



மனதைச் செலுத்த வேண்டும்.

நோயை மனதில் புறக்கணித்தலும், ஒளியை பாதுகாப்பிற்கு வரவேற்றலுமாகிய இந்த இரண்டையும் உறுதியாகச் செய்த பின்னர் உனது இச்சா சக்தியைக் கொண்டு ஒவ்வொரு உடல் கலத்தையும் அந்த ஒளியால் நிரப்ப வேண்டும். உன்னை நோயைப் பற்றிய சிந்தனையிலிருந்து விலக்கி வேறு பயனுள்ள விஷயங்களில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இதை எப்படி செய்வது என்பதை அறிந்து கொண்டால் நீ நோயுள்ளவர்களுக்கு அருகில் செல்லும் போது நோய்வாய்ப்பட மாட்டாய். ஆ ன ா ல் இதை எப்படிச் செய்வது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பலர் நாம் நோய்க்குப் பயமில்லை, எனக்கு மனதில் சிறிதும் பயமில்லை, நாம் மிகவும் வலிமையானவன் என்று வார்த்தைகளில் சொல் லிக்கொண்டிருப்பார்கள், ஆனால் உடலுக்குள் ஒரு நடுக்கமும் நோய் வந்துவிடுமோ என்ற பயமும் ஆட்பட்டிருக்கும். இந்த பயமும் நடுக்க முமே நோயை ஆகர்ஷிக்கும் காரணிகள். இந்த இடத்தில்தான் நீ உனது இச்சாக்தியைப் பிரயோகித்து உடலிற்கு அமைதியையும், நீ தெய்வீக அருளால் பாதுகாக்கப்படுகிறாய் என்ற உணர்வையும் உனக்குள் கொண்டுவர வேண்டும்.

சில நேரங்களில் எல்லா பரிந்துரைகளும் பயனற்றுப்போகும், உலகம் முழுவதும் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும், தொடுபவர்கள் எல்லோருக்கும் கட்டாயம் நோய் பரவும் என்று கூறப்படும் போதும், நோயுற்றவர்களைத் தொடும்போது கட்டாயம் நோய் தொற்றும் என்று கூறப்படும் போது உனது அகப் பொறிமுறைகள் இந்தச் சவால்களை பௌதீகமாகச் சரியாக கையாளக்கூடிய வலிமை இல்லாமல் இருக்கும் போதும், முட்டாள்தனங்களால் நிறைந்திருக்கும் போதும் நீ மேற்கூறியதிலிருந்து விலகி ஓட முனைவாய்! இவையெல்லாம் தான் உடல் ஒருவர் இன்னொருவருக்கு நோயைப் பற்றிக்கூறுபவை! குறிப்பாக இரண்டு மூன்று மருத்துவர்கள் உன்னைச் சுற்றி இருந்தால் இவை யெல்லாம் கட்டாயம் நிகழும்!

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# கடவுளோடு உறவாடும் நேரம் எது...?



கடவுளுக்கும், மனிதனுக்கும் எப்போது உறவு ஏற்படுகிறது? என்று கேட்டால் உறவு என்பது இல்லாமல் எப்போது இருந்தது? அப்படி ஒரு நாள் இருந்திருந்தால் மனிதன் என்பவன் உருவாகி இருப் பானா? எனவே காலையில் சூரியன் உதிப்பது முதல் அடுத்த நாள் காலையில் புதிய உதயம் வருவது வரையில் ஒரு வினாடி கூட இடைவெளி இல்லாமல் மனிதன் கடவுளோடு உறவாடி கொண் டிருக்கிறான் அல்லது உறவில் இருக்கலாம் என்று நமக்கு பதில் சொல்ல தோன்றும்.

தூங்குகையில் வாங்குகிற மூச்சு அது சுழிமாறி போனாலும் போச்சு என்பது போல நமது வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியுமே இறைவனின் பேரருளாலும் அருள் உறவாலும் நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரே உதாரணம் நமது நுரையீரலில் இருந்து இயங்குகிற சுவாசம் இது எப்படி நடக்கிறது? இதை நடத்தி வைப்பவர் யார்? பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் நிற்காமல் நிதானிக்காமல் இயக்கி கொண்டே இருப்பவர் யார்? என்று சிந்தித்தால் கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவு புரியும்.

இருந்தாலும், கடவுளுக்கும் நமக்கும் மிக நெருங்கிய உறவு எப்போது ஏற்படுகிறது? என்ற கேள்வியை நம்மால் கேட்காமல் இருக்க முடியவில்லை. சூரியன் வருவதும், மரம், செடிகள் துளிர்ப்பதும், மலைகள் வளர்வதும், காற்று வீசுவதும் நாம் சுவாசிப் பதும் எல்லாம் கடவுளால் தான். இதில் சந்தேகம் இல்லை ஆனால் இந்த உறவு பறவைக்கும், வானத் திற்கும் இருப்பது போல தண்ணீருக்கும், மீனுக்கும் இருப்பது போல நமக்கும் அவருக்கும் இருக்கிறது இங்கு கேட்கப்படும் கேள்வியின் பொருள் அதுவல்ல. கடவுள் எப்போதும் என்னோடு இருக்கிறார் என்பதற்கு என் உயிர்வாழ்க்கை உதாரணம் என்பதை நான் மறுக்கவில்லை ஆனால் நான் எப்போது கடவுளோடு இருக்கிறேன் என்பது தான் என் கேள்வி யின் சாராம்சம்.




என் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களை நான் பரிசோதனை செய்து பார்க்கிறேன்.பல நேரங்களில் நான் உண்மையாகவே கடவுளிடத்தில் இல்லை. அவரிடமிருந்துவெகுதொலைவில் இருக்கிறேன். பணத்தின் பின்னால் சென்றுகொண்டிருக்கிறேன் உடம்பின் மேல் ஆசைப்பட்டு மோகம் என்ற பிணத்தின் பின்னாலும் சென்றுகொண்டிருக்கிறேன். குழந் தை பாசம் நண்பர்கள் நேசம், பதவி, வெறி, புகழ் மீது பேராசை இப்படி ஒவ்வொன்றின் பின்னாலும் வருடத்தின் முன்னூறு நாட்களும் சென்று கொண்டே இருக்கிறேன். மீதமுள்ள அறுபது நாட்களில் ஒரு சில மணிநேரம் கடவுளை பற்றி நினைத்து பார்க்கிறேனே தவிர மற்ற பொழுதில் உறக்கத்தோடும் போதையோடும் கலந்து கிடந்து விடுகிறேன்.

செக்குக்கும், சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாத மாடுகளை போல நான் வாழ்வது சரியா? நான் வாழ்கிற வாழ்க்கையை தேடி சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி பிறர் மனம் வாட பல செயல்கள் செய்து யமதர்மன் வருகின்ற காலத்தில் செத்துப்போகும் சாதாரண வாழ்க்கையை நான் மட்டுமா வாழ்கிறேன். என் வீட்டு நாயும் என் தோட்டத்து பன்றியும் இப்படித்தான் வாழ்கிறது. பிறகு நான் மனிதன்! உயர்ந்தவன், விண்ணை அளப்பவன், கடலை சாடுபவன் என்று ஜம்பம் பேசுவது எதற்கு?

அவனவன் வேலையை அவனவன் பார்க்க வேண்டுமென்று கடவுள் சொல்கிறான். படைப் பதும், படைத்ததை காப்பதும், காத்ததை அழிப் பதும், கடவுளின் வேலை அதை அவர் செவ்வனே செய்கிறார். மனிதனாகிய நமக்கு என்ன வேலை? வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். இன்பத்தின் கடைசி சொட்டு இருக்கும் வரை துளித் துளியாக அனுபவிக்க வேண்டும். அதை விட்டு விட்டு கடவுள் வணக்கம், நன்றி செலுத்துதல் இதெல்லாம் என்ன பத்தாம் பசலித்தனம் என்று நமக்கு பல நல்லவர்கள் புத்திமதி சொல்கிறார்கள் மிருகங்களை போல வாழ்வது தான் சரி என்று.

கடவுளும் நீயும் நெருங்கி இருக்கும் நேரம் அவனை நீ மனதிற்குள் வணங்கும் நேரம், தியானிக்கும் நேரம், பிரார்த்தனை செய்யும் நேரம், அந்த நேரம் மட்டிலுமே நீ பாவம் செய்யாதவனாக சுத்தமான ஆத்மாவாக இருக்கிறாய் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள். பிரார்த்தனை என்பது என்ன? என் குறைகளை, என் அபிலாஷைகளை கடவுளிடம் முறையிடுவது தானே? எனக்குள் இருக்கும் எண்ணம் இதுவென்று என்னை படைத்தவனுக்கு தெரியாதா? அதை நான் அவனிடம் முறையிடத்தான் வேண்டுமா? நான் சொல்லி தெரிந்துகொள்ளும் அளவிற்கு அவன் அப்பாவியா? என்று பகுத்தறிவு என்ற பாதி சைத்தான் பறையறைகிறது.

நான் கோவிலுக்கு போகிறேன். மண்டபத்தில் உட்காருகிறேன். அங்கே இரண்டு பெரியவர்கள் பேசுகிறார்கள். காதுகொடுத்து கேட்கிறேன். நீ எந்த மதத்தை சேர்ந்தவனாகவும் இரு. கோவிலின் சிலுவை முன்னே கும்பிடும் இயேசு மதத்தானாக இரு. திக்கினை வணங்கும் துலுக்கராக இரு. தீயினை வணங்கும் பார்ப்பணனாக இரு. எவனாக இருந்தாலும் கைகளை உயர்த்தியோ, மலர்த்தியோ, கூப்பியோ தான் கடவுளை வணங்குவாய். உன் கைகளில் இருக்கின்ற ஐந்து விரல்களும், ஐந்து கட்டளையை உனக்கு காட்டுகிறது. அதை புரிந்து கொள். பிரார்த்தனை என்றால் என்ன? அதன் சக்தி என்றால் என்ன? பிரார்த்தனை ஏன் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்பது உனக்கு தானாக விளங்கும்.

முதலில் இருப்பது கட்டைவிரல். அது உன்னிடம் மிக நெருக்கமாக இருக்கும் விரல். இந்த விரல், உன்னை பெற்றவர்களை, உனக்கு பிறந்தவர்களை, கட்டியவளை ஒட்டிபிறந்த உடன்பிறப்புகளை, நண்பர்களை, நல்லவர்களை அருகில் மிக அருகில் உள்ள சொந்தங்களை காட்டும். இந்த கட்டை விரலை பார்க்கும் போது இவர்களுக்காக பிரார்த்தனை செய்யவேண்டும்


ஆன்மிகமலர் மெயில் புக்

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

என்ற எண்ணம் உனக்கு வரவேண்டும்.

அடுத்ததாக இருப்பது சுட்டும் விரல். என்ற ஆள்காட்டி விரல். சுட்டும் விரல் வழிகாட்டுவது போல் திக்கு தெரியாமல் தவித்து கொண்டிருக்கும் பலருக்கு நல்வழிகாட்டுகிற ஆசான்கள் நோயை சாகடித்து ஆரோக்கியத்தை தரும் மருத்துவர்கள். நீயும், நானும் சுகமாக வாழ அறிவை பயன்படுத்தி, நவீன கண்டுபிடிப்புகளை தரும் விஞ்ஞானிகள், அறிஞர்கள் இவர்களுக்காக இவர்களின் நலத்திற்காக, இவர்களின் எண்ணிக்கை பெருகுவதற்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உனக்கு வரவேண்டும்.

அடுத்ததாக நடுவிரல். இது எல்லா விரல்களை விட உயர்ந்தது. அதனால் நாட்டு தலைவர்கள், இராணுவ வீரர்கள், நிறுவன அதிபர்கள், ஊர் பெரிய மனிதர்கள், நாட்டுக்கு வழிகாட்டும் தியாகிகள், இவர்களை குறிப்பதாகும். இந்த விரலை பார்க்கும் போது இப்படிப்பட்ட மகாபாக்கியசாலிகள் எப்போதும் நல்லவர்களாகவும், நாணயம்மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை உதிக்க வேண்டும்.

தங்கத்தில் மோதிரம் செய்து அணிந்தாலும் கூட, மோதிர விரல் என்பது பலகீனமானது. விரல்களுக்கு அபாயம் வந்தால் அதில் உடனடியாக மாற்றி கொள்வது மோதிர விரல்தான். இந்த விரல் எப்போதுமே அபாயத்தை நோக்கிய வண்ணம் இருக்கிறது என்பதை பியானோ வாசிப்பவர்களும், தட்டச்சு செய்பவர்களும் நன்கு அறிவார்கள். இப்படிப்பட்ட மோதிர விரல் நிலைமையில் இருப்பவர்கள் யார்? கண்ணை மூடிக்கொண்டு யார் வேண்டுமானாலும் சொல்லலாம். அப்படிப்பட்ட அப்பாவி ஜீவன்கள் சாதாரண பொது ஜனமென்று. இவர்களுக்கு தனக்கு வந்த துயரத்திற்காக முனங்ககூட தெரியாது. யாரோ ஒருவன் தான் பார்த்து குரல்கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட பலகீனமான மக்களை மோதிர விரலை பார்த்தவுடன் நினைவுபடுத்தி அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இப்போது கடைசியாக இருப்பது சுண்டுவிரல். இந்த சுண்டுவிரல், மற்ற விரல்களை விட சின்ன விரல் இதை பார்த்தவுடன் கடவுளின் சக்திக்கு முன்னால் நான் எவ்வளவு சிறியவன் என்ற அடக்க உணர்வு வரவேண்டும். அப்படி வந்தால் மட்டுமே அனைவருக்கும் உனது அருளை கொடுத்துவிட்டு, இறுதியாக சிறிதாவது என்னை கடைக்கண் வைத்துப்பார் என்று வேண்ட வேண்டும். தனது துயரத்தை தள்ளி வைத்து விட்டு மற்றவனின் துயரத்தை முன்னுக்கு கொண்டுவந்து அதை தீர்த்து வைப்பாய் என்று யார் கடவுளிடம் தன்னலம் மறந்து பிரார்த்தனை செய்கிறானோ அவனே கடவுளுக்கு மிக அருகில் வருவான். கடவுளோடு எப்போதும் உறவில் இருப்பான். கடவுளுக்கும் அவனுக்கும் பிரிவு என்பதே கிடையாது.

ஒரு கைப்பிடி அளவு அரிசி கிடைத்தால் அதை சமைத்து விருந்தினருக்கு பரிமாறிய பிறகே தான் அருந்துகிற உயர்ந்த பிறப்பாளர்கள் பிறந்த இந்த பூமியில் பானையில் அரிசி இல்லை என்றாலும், பூனைக்குட்டிக்கு கால்பிடி பால்கிடைக்காதா என்று நீ உள்ளன்போடு தேடுகிறாயோ அன்றே நீ கடவுளை நோக்கி மிக நெருக்கமாக சென்றுவிட்டாய் என்பது அர்த்தமாகும். கடவுளை, கடவுளை தொட, கடவுளை நம்மை வாரி அணைக்க முதலில் மறக்க வேண்டியது சுயநலம். வளர்க்க வேண்டியது பரோபகாரம். எனவே மண்ணை தொட்டு வணங்கினால், கிருஷ்ணனை தொட்டு வணங்குவதற்கு சமம். அதற்கு பிரார்த்தனை செய்யுங்கள் கடவுள் வருவார்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434





மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க

Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து

நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை




இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...

# ஆன்மீக நிவாரணம்!

1 ஆன்மீக நிவாரணத்திற்கு ஒரு அறிமுகம்.

ஆன்மீக நிவாரணம் அல்லது சக்தி நிவாரணம் எனும் பதங்கள் பலரும் அறிந்ததே. அனால் இவற்றின் அர்த்தம் வெவ்வேறு மனிதர்களால் வெவ்வேறு விதமாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், 'ஆன்மீக நிவாரணம்' எனும் சொற்றொடரின் பொருளை வரையறுத்து, அது எந்த கோட்பாடுகளின் மூலம் செயற்படுகிறது என்பதை பற்றி காண்போம்.

'வாழ்வின் நோக்கத்தில் ஒன்றான ஆன்மீக முன்னேற்றமடைதல்' என்பதை முன்னிறுத்தியே எழுதப்பட்டுள்ளது. இதன் குறிக்கோள் என்னவென்றால் ஒருவருக்கு பௌதீக அளவில் உதவி செய்வது மட்டுமல்லாமல், அவரது ஆன்மீக முன்னேற்றத்திலும் கவனம் செலுத்துவதாகும். ஒருவருக்கு ஆன்மீக நிவாரணம் செய்யும் போது, அவரது ஆன்மீக முன்ன்னேற்றத்திற்கு உதவி செய்வதையும் நினைவில் கொள்வோமே ஆயின், வாழ்வின் நோக்கத்திலிருந்து விலகி செல்லாமல் இருக்க இயலும். இந்த உயர் நோக்கத்தை மனதில் கொண்டு ஒருவருக்கு ஆன்மீக நிவாரணம் செய்யும்போது நமது ஆன்மீக திறன் குறைவதில்லை.

2 ஆன்மீக நிவாரணம் என்றால் என்ன?

ஆன்மீக ஆராய்ச்சியின்படி, ஒருவரது வாழ்க்கையில் 80% கஷ்டங்களின் மூலகாரணம் ஆன்மீக பரிமாணத்திலேயே உள்ளது.

ஆன்மீக நிவாரணம், நல்ல சக்தியை உள் வாங்குவதற்கும் தீயவற்றை விலக்குவதிற்கும் உதவி செய்கிறது

எஸ்.எஸ்.ஆர்.எஃப். (SSRF), 'சூட்சும உலகம்' அல்லது 'ஆன்மீக பரிமாணம்' என்பதை ஐம்புலன் கள், மனம் மற்றும் புத்தி ஆகியவற்றுக்கு அப்பாற் பட்டது என வரையறுக்கிறது. சூட்சும உலகம் என்பது கண்களால் காண இயலாத தேவர்கள், ஆவிகள், சுவர்க்கம் நிறைந்த உலகை குறிக்கிறது. இதை நம் ஆறாவது அறிவால் மட்டுமே உணர முடியும்.

ஒரு பிரச்சனையின் மூல காரணம் ஆன்மீக பரிமாணத்தில் இருக்கும்போது, அதை எதிர்கொள்ளவோ, அல்லது தீர்வு காணவோ, அந்த மூல ஆன்மீக காரணத்தைவிட ஆற்றல்மிக்க ஒரு முறையே தேவையாகின்றது. இதையே ஆன்மீக நிவாரணம் என்கிறோம். இதுவே, ஆன்மீக சக்தியை பயன்படுத்தி ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண்பதாகும். உதாரணத்திற்கு தீய சக்திகளால் ஏற்படும் கஷ்டங்கள். எவரொருவருக்கு, தீயசக்திகளினால் ஏற்படும் பாதிப்பு இல்லையோ, அவர்கள் ஆன்மீக நிவாரணத்திற்கு உட்படும் போது, கூடுதல் நல்ல சக்தி கிடைக்கப் பெறு கிறார்கள்.

2.1 பிரச்சனையின் அறிகுறிகளுக்கும் மூல காரணத்திற்கும் உள்ள வித்தியாசம்

நோய்களின் பல அறிகுறிகள் ஆன்மீக மூல காரணத்தை சுட்டிக்காட்டும் ஒருவரிடம் வெளிப்படும் அறிகுறிகளுக்கும் அடிப்படை மூல காரணத்திற்கும் உள்ள வித்தியாசத்தை கண்டறிவது முக்கியமாகும். இதை நாம் கீழ் காணும் உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

எஸ்.எஸ்.ஆர்.எஃப். (SSRF), தீய சக்திகள் எனும் பதத்தை, சாதாரண சக்தி படைத்த ஆவி களிலிருந்து அதிக சக்தி வாய்ந்த மாந்திரிகன்கள் வரை, மனித இனத்திற்கு தீங்கு விளைவிக்க கூடிய, சூட்சம நிலையில் உள்ள அனைத்து தீய சக்திகளையும் குறிக்கும் கூட்டு பெயர்ச்சொல்லாக பயன்படுத்தியுள்ளது. ஒன்றிலிருந்து பத்து எனும் அலகுகளின் அளவில், ஒரு சாதாரண ஆவியின் சக்தி இருக்குமாயின் ஒரு மாந்திரீகனின் சக்தி நூறு கோடியிலிருந்து முடிவிலி வரையாகும்.

நவீன், ஜனனியின் அறையில் அவள் இல்லாதபோது ஒரு வாளி தண்ணீரை தரையில் கொட்ட முடிவு செய்கிறான். அவ்வாறு செய்து விட்டு ஜனனி வரும்போது அவளது எதிர்வினையை கண்டு களிப்பதற்காக ஒளிந்து கொள்கிறான். ஜனனி அறையினுள் நுழைந்து ஈரத்தரையினை கண்டு, காரணம் என்னவாக இருக்கும் என நாலாபுறமாக தேடுகிறாள். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. நவீன் அவளின் நிலையை பார்த்து உள்ளுக்குள்ளே ஒரு நமுட்டு சிரிப்பு சிரித்து கொள்கிறான். அவளின் அறியாமையை அதாவது பிரச்சனையின் மூல காரணத்தை உணராத அறியாமையை கண்டு மகிழ்ச்சி அடைகிறான். இங்கு பிரச்சனையின் மூல காரணம் என்பது அவனே ஆவான்.

இந்த ஒப்புமை, ஆவிகளாலோ அல்லது தீய சக்திகளாலோ ஏற்படும் தாக்குதல் எவ்வாறு வாழ்வின் கஷ்டங்களுக்கு (உதாரணத்திற்கு இதய நோய்) காரணமாக அமைகின்றது என்பதை விளக்குகிறது . அதாவது இதய நோயை தரையில் இருக்கும் தண்ணீருக்கும், ஆவிகள் அல்லது தீய சக்திகளின் தாக்குதலை நவீனுக்கும் ஒப்பிடலாம். உண்மையில் நமக்கு ஆறாவது அறிவு கொண்டு பார்க்கும் திறன் இல்லாத காரணத்தால், ஆவிகளை பார்க்கவோ, உணரவோ இயலாமல், நெஞ்சு வலிக்குண்டான காரணங்களை தேடுவதில் பற்றாக்குறையை எதிர்கொள்கிறோம். துரதிர்ஷ்டவசமாக நோய்க்கான காரணங்களின் நமது விசாரணை உடலளவிலும், உளவியல் அளவிலும் மட்டுமே உள்ளது.

2.2 ஆன்மீக நிவாரணம் எதை குணப்படுத்துகின்றது?

மேலே உள்ள உதாரணத்தின் அடிப்படையில், இதய நோய் உண்மையில் ஆன்மீக காரணங்களினால் வருகிறது என்பதை இப்போது நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு மருத்துவ பிரச்சனையை (ஆன்மீக மூல காரணத்தினால் ஏற்பட்ட) மருந்துகள் மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சை மூலமாகவோ குணப்படுத்தக முயல்வது, ஆன்மீக மூல காரணத்தினால் ஏற்பட்ட பாதிப்பை மட்டுமே போக்க உதவும். இதனால், இதய நோயை மருந்துகள்

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

மூலமாகவோ, அறுவை சிகிச்சை மூலமாகவோ, மருத்துவ அறிவியல் குணப்படுத்துவது என்பது நோயின் அறிகுறிகளை மட்டுமே. ஆனால் நோய்க் கான மூல காரணத்தை (ஆவிகள் அல்லது தீய சக்திகள்) கவனிக்காததாலும், அது இன்னும் செயல்பாட்டில் உள்ளதாலும் நோய் திரும்ப வரு கிறது.

ஆன்மீக நிவாரணம் என்பது பிரச்சனையின் மூல காரணத்தை கண்டறிவதும், அதை அகற்றுவதுமேயாகும். மேற்கண்ட உதாரணத்தில், இது நவீனை (தீய சக்தி) கண்டுபிடிப்பதும், அவன் மேற்கொண்டு தண்ணீரை தரையில் ஊற்றாமல் (இதய நோயை உண்டாக்குதல்) தடுப்பதுவுமேயாகும். இதன் மூலம் வருவதற்கு சாத்தியமுள்ள பிரச்சனைகளை கூட வரவே விடாமல் தடுக்க பயன்படுத்த இயலும்.

ஆன்மீக நிவாரணம், ஆன்மீக மூல காரணத் தினால் உண்டாகும் நோய்களை குணப் படுத்து கின்றது

2.3 ஆன்மீக நிவாரணம் வெற்றிகரமாக அமைய சரியான சக்தி நிலையை பயன்படுத்துவது முக்கியமாகும்

மேம்பட்ட ஆன்மீக நிவாரணங்கள் ஒரு உடல் குறைபாட்டை முற்றிலுமாக நீக்கவல்ல சாத்தியங்கள் உள்ளவை. ஆனால் பெரும்பா லான பிரச்சனைகளில், உடலளவில்ஏற்பட்ட சேதத்தை போக்க உடலளவிலான முயற்சிகளை (மருத்துவ சிகிச்சை) மேற்கொள்ளவேண்டும். எதனா லென்றால், ஆன்மீக சக்தி விலைமதிப்பற்றதாகவும், மருத்துவ சிகிச்சையை போன்ற உடலளவிலான முயற்சியை காட்டிலும் கிடைப்பதற்கரியதாகவும் உள்ளதாலேயே. ஆன்மீக வழிமுறைகளை பயன் படுத்தி ஒரு நோயை குணப்படுத்துவதற்கு நிறைய விலைமதிப்பற்ற ஆன்மீக சக்தி தேவையாகின்றது. அதே பயனை ஒப்பீட்டளவில் குறைந்த உடலளவு முயற்சிகளினாலும் பெற இயலும்.

இதனாலேயே எஸ்.எஸ்.ஆர்.எஃப். சரியான சக்தி நிலையை பயன்படுத்தி ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறது. உதாரணத்திற்கு, ஒருவருக்கு ஆன்மீக மூல காரணத்தால் எக்சீமா போன்ற தோல் நோய் உண்டானால், அதை குணப்படுத்த கீழ் கண்ட மூன்று நிலைகளிலும் சிகிச்சை செய்ய வேண்டும்:

உடலளவில் மருந்துகள் மூலம் உளவியல் அளவில் எக்சீமாவினால் மன அழுத்தம் இருக்குமாயின்ஆன்மீக நிலையில் ஆன்மீக மூல காரணத்தை போக்க ஆன்மீக நிவாரணங்கள்

3. நீங்கள் எவ்வாறு ஆன்மீக நிவாரணத்தை துவங்கலாம்?

ஆன்மீக நிவாரணத்தை துவங்குவது எளிது. இதை சில எளிய முறைகளில் செய்யலாம். உதாரணத்திற்கு ஒரு 15 நிமிடத்தில் செய்யக்கூடிய மிக பயனுள்ள, எளிய ஆன்மீக நிவாரணம், உப்பு நீர் ஆன்மீக நிவாரணம். இதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விளக்கும் காணொளியை கீழே காண்க. ஆரோக்கியத்திற்காக நாம ஜபம் , நியாஸ் (குவிக்கப்பட்ட சக்தி நிவாரணம்) மற்றும், பிற சுயமாக செய்யும் ஆன்மீக நிவாரணங்களையும் நீங்கள் செய்யலாம்.

நீங்கள் மேலும் ஆன்மீக நிவாரணத்தை பற்றி அறிய விரும்பினால் ஆன்மீக நிவாரணத்தின் கோட்பாடுகள் எனும் கட்டுரையை படிக்கவும். இதில் உங்களுக்கு, ஆன்மீக நிவாரணத்தை பாதிக்கும் காரணிகள் எவை , மருத்துவ அறிவியலுக்கும் ஆன்மீக நிவாரணத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன, நீங்கள் ஆன்மீக நிவாரணம் செய்யும் ஒருவரை அணுக வேண்டுமா, ஆன்மீக நிவாரணம் செய்யும் ஒருவர் அதை எவ்வாறு செய்ய வேண்டும், என்பதை போன்ற பல வினாக்களுக்கு விடை கிடைக்கும்.

இந்த ஆன்மீக நிவாரண முறைகளை பின்பற்றி உங்களை முழுமையாக குணப்படுத்திக்கொள்ளும் செயல்முறையை இன்றே துவங்குங்கள்.

உப்பு நீர் ஆன்மீக நிவாரணம் தீய சக்திகளை நீக்கி, நல்லவற்றை அதிகரிக்க செய்கின்றது.

எஸ்.எஸ்.ஆர்.எஃப். ஆன்மீக நிவாரணத்துடன், உடலளவிலும், மனதளவிலான நோய்களுக்கு வழக்கமான சிகிச்சை முறைகளை தொடர பரிந்துரை செய்கின்றது.

வாசகர்கள் அவர் அவர்களின் சுயேச்சையான விருப்பத்தை பயன்படுத்தி ஆன்மீக நிவாரண முறைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626





# காசி விஸ்வநாதர் ஆலயம்

முக்தித் தரும் தலங்கள் ஏழு, அதில் காசியும் ஒன்று. இந்தியாவின் முதன்மையான ஜோதிர்லிங்கத் தலம். இங்குள்ள விஸ்வநாதர் ஆலயத்தின் கோபுரம் 51 அடி உயரமுள்ளது. முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்பால் தொன்மையாக கோயில் அழிக்கப்பட்டது.

தற்போது உள்ள ஆலயத்தை 1785ல் மகாராணி அகல்யா பாய் கட்டினார். கோவிலின் உள்ளே நேபாள அரசரால் வழங்கப்பட்ட ஒரு பெரிய மணி உள்ளது. இந்த மணியின் நாதம் வெகு தொலைவிற்கு ஒலிக்கும் என்பது இதன் சிறப்பம்சம். ஆலயத்தின் உள்ளே உள்ள கிணற்றில் பழமையான லிங்கம் வைக்கப்பட்டிருப்பதாய் ஐதீகம். காலை 3.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை திறந்திருக்கும் இவ்வாலயத்தின் வழிபாடு சிறப்புமிக்கது. குறிப்பாக இரவில் நடக்கும் சப்தரிஷி பூஜை மிகமுக்கியமானது. வழிபாட்டிற்கான பூசை பொருட்கள் காசி நகரத்தார் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாலயத்தில் தனிச்சன்னதியில் அகில உலகத்தும் உணவளிக்கும் அன்னை அன்னை ஸ்ரீ அன்னபூரணி எழுந்தருளியுள்ளாள். காசி விஸ்வநாதரை நம் கையால் தொட்டு வணங்கலாம் என்பதும், அபிஷேகம் செய்யலாம் என்பது மற்றொரு சிறப்பு.

# பஞ்ச கவ்யம் அபிஷேகம்

சைவ சமயத்தில் சிவபெருமானுக்கு அபிஷேக பிரியர் எனவும், நம் பெருமானுக்கு அபிஷேகமே மிகவும் பிடித்தமானதும் என கூறுவர்.

அபிஷேகத்தில் மிகவும் பிடித்த அபிஷேகம் எது என்றால் “பஞ்ச கவ்யம்” அதாவது ஆனைந்து என்று பொருள்படும்.

பால், தயிர், நெய், கோசலம், கோமியம் (பசுஞ்சாணம்). இவை ஒன்றாக கலந்ததுதான் ஆனைந்து என்கிற பஞ்சகவ்யம்.

முன்பெல்லாம் திருக்கோயில்களில் முத லில் இவ் அபிஷேகம் செய்துதான் ஏனைய அபிடேகத்தை செய்வார்கள்.

ஆனால் இன்றோ ஒரு குறிப்பிட்ட சிவாலயத்தை தவிர மற்றைய ஆலயங்களில்



சோம்பலின் காரணமாக சிவலிங்கத்திற்கு பஞ்ச கவ்யம் அபிஷேகம் செய்வதில்லை.

மேலும், சிவ பூஜை செய்வோர் கூட பஞ்ச கவ்யம் அபிஷேகம் செய்ய வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

திருமுறைகள், ஆகமங்கள் புராணத்தில் கூட பஞ்ச கவ் யம் அபிஷேகம் சிறப்பாக பேசப் படுகிறது. ஆனால் தற்போது இவ் அபிஷேகம் செய்வதில்லை நாளடைவில் அபிஷேகத்தில் இருந்து விலக்கிக் கொண்டிருக்கி றோம் என்பது வேதனைக்குரியது.

– தொண்டீசன் ஈரோடு




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# நாகரீகமாய் நடந்து கொள்ளுதல்

இதுதான் கொள்கை என்று திணிக்கப்பட்ட கொள்கைகளும் அரசியலும் அநியாயத்திற்கு இட்டுச் செல்லுகிறது. இதுதான் என்று திணிக்கப்பட்ட கொள்கை ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக்கு நல்ல தத்துவ மாகவும், உண்மையாகவும் அமைகிறது. இது விஞ் ஞானத்திற்கு மட்டுமே. இதுபோல மதத்திற்கு இக்கொள்கை மிகவும் மோசமானது. மோசமானது என்று தெரிந்து கொண்டு மதம் இதை மேற்கொண்டால் அது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு சாக்கடையில் தேங்கிய தண்ணீரைப் போன்று கொசுக்களின் பிறப்பிடமாக காணப்படுகிறது.

❖❖❖



வாழ்க்கையின் தகுதி என்றால் என்ன? முதலில் ஆண் பெண் இருவரின் வாழ்க்கையிலும் தகுதி ஏற்படுதல் வேண்டும். பிறகே அது வாழ்க்கையின் தகுதி ஆகிறது. இதுதான் மனிதன், மனிதனின் உயிர் இவை இரண்டிற்கும் தகுதியாகின்றது.

❖❖❖

உலகில் இந்த தகுதி எப்படி கிடைக்கின்றது தெரியுமா? எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வேகம் படைத்த திறமை வாழ்க்கைத் தகுதியின் முக்கிய காரணமாகிறது. இதுவே தகுதி ஏற்படுத்துவதற்கு அல்லாமல் உயிரின் தகுதியையும் விளக்கி அதற்கு அப்பால் அனைத்தையுமே விளக்கி விடுகிறது.

❖❖❖

உயிர், வாழ்க்கை இவைகளின் முக்கிய தகுதி என்பது நவநாகரீக வாழ்க்கை, உலகம், அதன் தன்மை, நாகரீகமாய் நடந்து கொள்ளுதல் இவைதனை எதைக்கொண்டும் முன்னதாக சொன்ன வாழ்க்கை தன்மையை அளந்து காட்ட முடியாது. இவ்விடத்தில் நான் குறிப்பிட்ட நாகரீகம் உடல் வாழ்க்கையைப் பொறுத்த நாகரீகக் குறிப்பிடவில்லை. வளரும் உயிரின் நாகரீகத்தையே குறிப்பிட்டேன்.

❖❖❖

நாகரீகமான மனிதனும் பெண்ணும் நாம் எடைபோட்டு விரும்பும்படியாக இருப்பார்கள். காரணம் அவர்களிடம் சில சிறந்த கொள்கைகளும், நடைமுறைகளும் விரும்புகின்ற அளவு என்ற தன்மையைக் கொண்டது. இது அவர்களின் உயிருக்கும் பொருந்தும்.

❖❖❖

அன்புள்ள நண்பர்களே! நாடு விரும்புகின்ற எடைபோடும் படியான கொள்கை உங்களுடைய நடைமுறை வாழ்க்கையா அல்லது நீங்கள் செய்கின்ற தொழிலா, படிப்பா அல்லது நீங்களே அதிகமாக உங்கள் நாட்டிற்கு செய்ய இருக்கின்ற தன்மையா அல்லது உங்களுடன் வளர்ந்து வருகின்ற சமுதாயத்திற்கா? எது உங்களின் அளக்கும் தன்மையாகும்? இவை எல்லாமே எடைபோட்டு பார்த்து அளக்கின்ற தன்மையாகும்.

❖❖❖

ஒரு அழகான வரைபடத்தின் பெருமை கொண்ட மேம் பாடு உள்ள வேலைப் பாடு அந்த சித்திரத்தில் இல்லை. அதை தீட்டிய வண்ணச்சித்திரக்காரனின் கையில் இருக்கிறது. இங்கு சித்திரக் காரரின் எடைபோடும் விரும்பும் தன்மை அவன் வரைந்த அழகு சித்திரமே.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



ஆன்மிகமலர் மெயில் புக்

# திருநீறு அணியுங்கள்

## நரகம் கூட சொர்க்கமாக மாறும்



புராண காலத்தில் ஒருநாள் துர்வாச முனிவர் தன் காலை வேளை அனுஷ்டானங்களை முடித்து, சிவனை தியானித்து நெற்றியில் திருநீறு அணிந்து பித்ரு லோகம் புறப்பட்டார். துர்வாசர் செல்லும் வழியில் பெரிய கிணறு ஒன்று தென்பட்டது.

இவ்வளவு பெரிய கிணறை நாம் பார்த்ததே இல்லையே என்கிற சிந்தனையுடன் அதனுள் ஒரு கணம் கண்களைச் சுருக்கி எட்டிப் பார்த்து விட்டு, மீண்டும் நடக்க ஆரம்பித்தார். அந்தப் பெரிய கிணற்றினுள் பூலோகத்தில் பாவம் செய்த பலரும் அங்கே வதை பட்டுக் கொண்டிருந்தார்கள். சொல்ல முடியாத துயரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

துர்வாச முனிவர் குனிந்து அங்கே பார்த்துவிட்டு நகர்ந்த மறுகணமே திடீரென்று அங்கே நிலைமை தலைகீழாக மாறியது. அந்த நரகத்தில் அதிசயம் நடந்தது.

- ❖ பாம்புகளும் தேள்களும் மலர் மாலைகள் ஆயின.
- ❖ அமில மழையானது ஆனந்தம் தரும் நிஜ மழை ஆனது.
- ❖ சுட்டெரிக்கும் தீ, இதமான தென்றலாக அங்குள்ளோரை வருடியது.
- ❖ நரகம் முழுக்க சுகந்த நறுமணம் வீசியது.
- ❖ அங்கே இருந்த பாவ ஆத்மாக்கள் அனைவரும் ஆனந்தம் கொண்டனர்.
- ❖ முகத்தில் பிரகாசம் வீசியது.

இந்த நரகத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த கிங்கரர்கள் பயந்துபோய் எமனிடம் ஓடினார்கள். அதிர்ந்து போன எமனும் வந்து பார்த்து அதிசயி த்தான் அல்லல் பட வேண்டியவர்கள் ஆனந்தமாகத் திரிகிறார்ளே? என்று பதற்றத்துடன் இந்திரனிடம் ஓடினான்.

வந்து பார்த்த இந்திரனுக்கும் புரிய வில்லை. தேவாதி தேவர்கள் எவருக்கும் இதற்கான காரணம் புரியவில்லை. எனவே, எல்லோரும் சேர்ந்து கொண்டு சர்வேஸ்வரனிடம் போனார்கள்.

சிவபெருமான் சிரித்தவாரே இவை அனைத்தும் திருநீற்றின் மகிமை, தனது நெற்றியைக் காட்டி, இந்தத் திருநீற்றை அகார, உகார, மகார என்று அழைக்கப்படும் (மோதிர விரல், நடுவிரல், ஆட்காட்டி விரல்) விரல்களால் எடுத்து நெற்றி நிறைய திரிபுரண்டர மாகவே (மூன்று கோடுகளாக) அணிய வேண்டும்.




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033


இவ்வாறு அணிவதால்

- ❖ அகாரம் என்பது பிரம்மனையும்,
- ❖ உகாரம் விஷ்ணுவையும்,
- ❖ மகாரம் என்னையும் குறிக்கின்றன.

எனவே சாஸ்திர நெறிப்படி திருநீறு அணிந்த தவசீலரான துர்வாசர் பித்ரு லோகக் கிணற்றைக் குனிந்து பார்க்கும்போது அவரது நெற்றியில் இருந்து ஒரு சிறு துளி திருநீறு உள்ளே விழுந்து விட்டது.

அதனால்தான், சொர்க்கமாக மாறிப் போனது என்றாராம் சர்வேஸ்வரன்.

இதுதான் திருநீற்றின் மகிமை, துர்வாசரின் ஒருதுளி திருநீறுக்கு இவ்வளவு சக்தி இருக்கும்போது, அந்த திருநீற்றை தினமும் நமது நெற்றியில் அகார, உகார, மகார முறைப்படி அணிந்தால் எத்தனை சக்தி கிடைக்கும்.

இனி நம் நெற்றியை பாழ்பட்டு வறண்ட பிரதேசமாக வைக்காமல், நெற்றிமுழுவதும் திரு நீற்றை அணிந்து ஆனந்த வாழ்வு வாழ்வோம்.

# இந்து மதமும் அக்னியும்

"ஓ அக்னியே, வேள்வியின் தலைவனே" என்று தொடங்குகிறது. ரிக் வேதம், வேதங்கள் அனைத்திலும் அக்னியே அதிகம் அழைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட இருநூறு சுலோகங்கள் அக்னிக்கு மட்டுமே உள்ளதாய் சொல்கிறார்கள்...

அக்னி சக்தியின் ஆதாரம். இட ,பிங்களா, நடு நாடிகளில் அக்னியே நடுநாடியாக செயல் படுகிறது. ஐம்பூதங்களில் நடு பூதமாக இருப்பதும் அக்னியே....பஞ்ச வாயுக்களில் சமான வாயுவாக மாற்றம் கொண்டிருப்பதும் அக்னியே

மோகத்தைக் குறிக்கும் மன்மதனை எரிப்பதால், அது தேவையற்ற ஆசைகளையும் அழித்து விழிப்புணர்வை பெருக்கக் கூடியது.

அக்னி நம் ஒவ்வொருவரின் ஆதாரமாய் இருக்கிறது. நம்முள் உயிர் சக்தியாக, நம் உணவை செரிமானமாக்க என நம் உள்ளேயும் இருக்கிறது. சூரியன் உட்பட எண்ணிலடங்காத நட்சத்திரங்களின் ஆதாரமாகவும் இருப்பது அக்னியே.

விஞ்ஞானி ஐன்ஸ்டின் குறிப்பிட்டது போல் சக்தியை (ஆற்றலை) ஆக்கவும், அழிக்கவும் முடியாது?

அதுபோல் "உன்னால் எதையும் படைக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது" என்கிறது கீதை. அக்கினி ஆற்றலின் குறியீடாக இருக்கிறது.

வேள்வியில் வரும் தீயில் இருப்பது மட்டும் அக்னி அல்ல. தவம் இருக்கும் யோகி களின் ஒருங்கிணைக்கப்பட்ட எண்ணமும் அக்னி தான். அக்னி என்பது இறை சக்தி, ஏன் இறைத்தன்மையே அக்கினி ஸ்வரூபமாகதான் இருக்கிறது. இறைத்தன்மையடைய அக்னியை விடச் சிறந்த வழி இல்லை.

'தமஸோமா ஜ்யோதிர்கமய' என்று வேதாந்தத்தின் ஒரு சுலோகம் மிகப் பிரபலமானது. "இருளிலிருந்து எங்களை ஒளியை நோக்கி வழிநடத்துங்கள்" அல்லது "ஒளியை நோக்கிச் செல்வோமாக" என்கிற பிரார்த்தனை அது.

அந்த ஒளி என்னும் அக விழிப்புணர்வுதான் அக்னி. அதனால்தான் அக்கினி ஒவ்வொரு தினமும் வீடுகளில் ஏற்றப்படுகின்றது, வீட்டில் தினமும் விளக்கேற்றுவதற்கு முன்னுரிமை தரப்படுகின்றது. ஒவ்வொரு சுபநிகழ்விலும், நிகழ்ச்சிகளிலும் விளக்கேற்றப் படுகின்றது.

மொத்தத்தில் கோயில்களிலும் சரி, வீடு களிலும் சரி, மந்திரங்கள் சொல்லப் படும் போது அக்னி (விளக்கு) ஏற்றப்படாமல் செய்யப்படுவது இல்லை.

பிறந்த நாள் போன்ற நாட்களில் அக்னியை ஊதி அனைக்கும் பழக்கம் தற்போது நவ நாகரீக கலாச்சாரமாக பரவி வருகிறது. இது முற்றிலும் தவறு, மனித சக்திக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும் அக்னியை அனைத்துவிட்டு பிறந்த நாளை கொண்டாடும்போது, நமது ஆதார சக்தி யின் வீரியம் குறையும்.

அக்னி பலம் இல்லாதவனையே நோய் தொற்றுக்கள் பீடிக்கும். அக்னி தத்து வம் உடலில் நன்கு செயல்படும் வரை நோய்கள் அணுகாது.

அவ்வாறு நோய்த்தொற்று களால் பாதிக் கப்பட்டாலும் அக்னி பலம் பெற்றவனால் உடனடியாக மீண்டுவிட முடிகிறது.

பிடித்து வைத்த பிள் ளையாரும், சுடர் விடும் அக்னியும் இல்லாமல் நம் முன் னோர் எந்தவித வி ழா க் க ளை யு ம் கொண்டாடியது கிடை யாது.







# 3,6,9, எண்களின் இரகசியமும் பழநி முருகனின் மர்மமும்

கம்பியில்லா மின்சாரம் பற்றி ஆய்வுமேற்கொண் டிருந்த அமெரிக்க விஞ்ஞானி நிக்கோலஸ் டெஸ்லா, இந்த பிரபஞ்சத்தில் காலப்பயணம் மேற்கொள்ளும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

அதாவது, கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் போன்ற காலங்களுக்கு பயணிப்பது குறித்து ஆராய்ச்சி செய்ததாக குறிப்புகள் சொல்கின்றன. அப்படிபட்ட ஆராய்ச்சியாளர் ஒரு குறிப்பை இந்த உலகத்துக்கு கொடுத்து விட்டு சென்றுள்ளார்.

அது என்னவென்றால் 3,6,9, ஆகிய இந்த மூன்று எண்களின் இரகசியத்தை அறிந்து கொண்டால் இந்த பிரபஞ்சத்தின் ஒட்டு மொத்த ரகசியத்தையும் அறிந்து கொள்ளலாம் என்று தனது கருத்தை வெளிப்படுத்தி உள்ளார் .

இந்த 3,6,9 என்ற எண்களை அடிப்படையாக கொண்டு மேற்கு உலக நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இன்றளவும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

அப்படியே இந்த 3,6,9 எண்களை எடுத் துக்கொண்டு தமிழ்நாட்டின் பழனி முருகன் வாசம் செய்யும் பழனி மலைக் கும் இந்த எண்ணிற்கும் தொடர்பு இருப்பதாக ஒருசில இறை அன்பர்கள் கூறிவருகின்றனர்.

நம்முடைய இந்து வழிபாட்டு முறைகளில் 3,6,9 என்ற எண்ணிக்கை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் அது பழனி மலையில் தெளிவாக நிரூபிக்க பட்டுள்ளது

3 கோணம் கொண்ட முக் கோண மலை பழனி மலை

6 முக கடவுளான முருகன் சிலை

9 வகையான பாஷாணங் களாகிய நவபாஷாணத்தில் செய்யப்பட்டுள்ளது மேலும் போகர் என்ற 3 எழுத்து கொண்ட சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது



மேலும் போகர் ஏன் பழனி மலையை தேர்ந்தெடுத்தார் என்றால் செவ்வாய் கிரகத்தின் கதிர்வீச்சு பழனி மலையில் இறங்குவதாக குறிப்புகள் உள்ளது.

செவ்வாய் என்பவர், 9 ஆம் எண் ணுக்கு அதிபதி ஆகும்.

எனவே பழனி மலையில் 3,6,9, என்ற எண்ணின் ஆதிக் கம் நிறைந் துள்ளதாகவே கருதப்படு கிறது.

இது எதிர்பாரமல் நடந்த விசயமாக கருதவில்லை பழனிக்கும் ஆராய்ச்சியாளர் சொன்ன எண் ணிக்கைக்கும் ஏதோ ஒரு தொடர்பு அவசியம் இருந்திருக்க வேண் டும்.

இதை சரியான ஆராய்ச்சி மூலம் கணித்தால் உலகின் பல்வேறு கேள் விகளுக்கு எளிதான பதில் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

நன்றி: லட்சுமிகாந்தன்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



ஆச்சரியமான

# உண்மை....

சந்தா இல்லை

நன்கொடை பெறுவதில்லை

விளம்பரங்கம் வாங்குவதில்லை

ஆனாலும் வெற்றிகரமாக

# 100வது இதழை நோக்கி

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ–புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்
ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....

❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...